விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 19 சனிக்கிழமை (03.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 196

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
RAMCO

## அமைச்சர் பீரிஸிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸிற்கு எதிராக நம்பிக்கையில்லா பேரரணை ஒன்றை நிறைவேற்றுவதற்கு ஐ.தே.க. தீர்மானித்துள்ளது. ஐ.தே.கவின் உயர் மட்டச் செயற்குழுக் கூட்டத்தில் ஓரிரு தினங்களுக்கு முன் இத்தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு முரண்பட்ட விதங்களில் கருத்துக்களை மாறி மாறிக் கூறிவருகின்றார் என்று குற்றஞ்சாட்டியே இந் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது. (ச-5)

## ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தயாராகிவரும் சந்திரிகா குமாரதுங்க

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தயாராகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இரண்டு முறைக்கு மேல் ஜனாதிபதி பதவியை வகிக்க கூடிய வகையில் அரசியல் சாசன மாற்றங்கள் செய்த பின்னர் அவர் தனது தீர்மானத்தை செயற்படுத்த உள்ளதாக கூறப்படுகிறது.

1978ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிஸ குடியரசு அரசியல் யாப்பின் பிரகாரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஒருவர் இரு தடவைகள் மாத்திரமே பதவிவகிக்க முடியும்.

இதனைமாற்றிய ஒருவர் மூன்று தடவைகள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவி வகிக்கும் வகையில் மாற்றங்களை செய்ய மகிந்த ராஜபக்ஷ தயாராகிவருகிறார். தனது மூத்த புதல்வர் நாமல் ராஜபக்ஷ அந்த பதவிக்கு தயார்படுத்தும் வரை அதிகாரங்களை (18ஆம் பக்கம் பார்க்க)

## மயோன் முஸ்தபாவிற்கு பிடிவிறாந்து உத்தரவு


(கொழும்பு)

முன்னாள் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபாவிற்கு கல்கிசை நீதிமன்றம் பிடிவிறாந்து ஆணை பிறப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலஞ்ச ஊழல் வழக்கு ஒன்று தொடர்பில் நீதிமன்றிற்கு ஆஜராகத் தவறிய குற்றத்திற்காக அவருக்கு பிடிவிறாந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு ஆதரவளிக்குமாறு தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் (18ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும்



## சிவசக்தி ஆனந்தன் வலிறுத்தல்

(கிளிநொச்சி)

இறுதிக்கட்ட யுத்தத்தில் கொல்லப்பட்ட அனைத்துத் தமிழ் மக்களுக்கும் நட்டஈடு வழங்கப்பட வேண்டும். உடல் உறுப்புக்களை இழந்தவர்களுக்கு அவர்களது வாழ்வாதாரத்துக்கான உத்தரவாதத்தை வழங்குவதுடன் நட்டஈடும்வழங்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவுசெலவுத்திட்டம் மீதான உரையின் போதே அவர் இதனைக் கூறினார். (18ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை ஆர்வலர்கள் 17 பேருக்கு இந்தியாவில் பட்டம்

(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமை ஆர்வலர்கள் 17 பேருக்கு இந்திய பல்கலைக் கழகங்களால் கௌரவப் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

டில்லி இந்திராகாந்தி திறந்த பல்கலைக் கழகம், பெங்களூர் பல்கலைக் கழகம் ஆகிய பல்கலைக் கழகங்களுடன் இணைந்து இந்திய புனர்வாழ்வு சபை இப்பட்டங்களை வழங்கிக் கௌரவித்தது. (ச)

# ஐ.நா. குழுவின் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

## இலங்கையிடம் ஐரோ. ஒன்றியம் கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கையிடம் ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நிபுணர்கள் குழு விசாரணைகளை நடத்தி வருகின்றது.

குறித்த விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் சகல தரப்பினரும் நன்மை அடைய முடியும் என ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார பொறுப்பதிகாரி கதரீன் அஸ்டன் தெரிவித்துள்ளார்.

விசாரணைக்கு (02ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் முக்கியஸ்தர் தப்பியோட்டம்

(கொழும்பு)

பொலன்னறுவை மாவட்டம் வெலிகந்த கந்தகடுவ பிரதேசத்தில் உள்ள முன்னாள் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் முகாமில் பயிற்சி பெற்று வந்த ஒருவர் பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 30ஆம் திகதி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

தப்பிச் சென்றவர் உட்பட முகாமில் உள்ள சிலர் இராணுவப் பாதுகாப்புடன் சிகிச்சைக்காக வைத்திய (02ஆம் பக்கம் பார்க்க)

## அவையில் ஒழுக்கமாக நடந்து கொள்ள சபாநாயகர் எம்.பிக்களுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

அவையில் ஒழுக்கத்துடன் நடந்து கொள்ளுமாறு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தனிப்பட்ட நபர்களின் பெயர்களுக்கு களங்கம் ஏற்படும் வகையிலான விமர்சனங்களை நாடாளுமன்ற உறுப்பினர்களை முன்வைக்கக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் நாடாளுமன்ற பார்வையாளர் கூடத்தில் குழுமுவதனால் அவதானமாக செயற்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவை நடவடிக்கைகளை பார்ப்பதற்காக மாணவர்களுக்கு அனுமதிவழங்கப்பட்டமையினால் நிதானத்துடன் செயற்படுமாறு உறுப்பினர்களுக்கு அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பக்க சார்பற்ற (18ஆம் பக்கம் பார்க்க)

## தூத்துக்குடி–கொழும்பு இடையே விரைவில் பயணிகள் கப்பல் சேவை

## இந்திய மத்திய அரசு ஆய்வு

(சென்னை)

தூத்துக்குடி–கொழும்பு பயணிகள் கப்பல் போக்குவரத்தை தொடங்குவது குறித்து மத்திய அரசு தீவிரமாக ஆய்வு செய்து வருவதாக இந்திய மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை செயலர் கே.மோகன்தாஸ் தெரிவித்தார்.


தூத்துக்குடி துறைமுகத்தில் பல்வேறு நிகழ்சிகளில் கலந்து கொண்ட அவர் பின்னர் செய்தியாளரிடம் பேசுகையில்,

தூத்துக்குடி–கொழும்பு பயணிகள் கப்பல் போக்குவரத்தை தொடங்குவதற்கான நடைமுறைகள் குறித்து மத்திய அரசு தீவிரமாக ஆய்வு செய்து வருகிறது.

தூத்துக்குடி–கொழும்பு இடையே முதல் கட்டமாகவும் இராமேஸ்வரம்–தலை மன்னார் இடையே இரண்டாம் (02ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**





மண்டைதீவு முகப்புவயல் முருகன் கோவில் மகா கும்பாபிசேகம் நேற்று நடைபெற்றது. சிவாச்சாரியர்கள் வேதம் முழங்க பிரதான கும்பத்துடன் பரிவார மூர்த்திகளுக்கான கும்பங்கள் எடுத்துவரப்படுவதையும் கும்பாபிசேக கிரியா பூசைகள் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

## ஐ.நா. குழுவின் விசாரணை...

ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் நாட்டில் இனங்களுக்கு இடையில் நிலவிவரும் முரண்பாடு களுக்கு நிரந்தர அரசியல் தீர்வுத்திட்டத்தை பெற்றுக் கொடுக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தின் அழுத்தங்களுக்கு அடி பணிந்து நடவடிக்கை மேற்கொள்ள முடியாது என அண்மையில் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ பகிரங்கமாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)


காயத்திரி பப்ளிகேஷனின்

நாடளாவியரீதியில் பாடசாலைமட்ட
முன்னோடி புலமைப்பரிசில் பரீட்சை 2010

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களை பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்கான முன்னோடி பரீட்சையை ஆசிரியர் வே.நவமோகனின் வழிகாட்டலில் காயத்திரி பப்ளிகேஷன் நிறுவனம் நாடளாவிய ரீதியில் பாடசாலை மட்டத்தில் நடத்தவுள்ளது.

- இரண்டு பகுதி வினாத்தாள்களைக் கொண்ட இப்பரீட்சை எதிர்வரும் ஜூலை மாதம் 18 ஆம் திகதி நாடளாவியரீதியில் நடத்த திட்டமிடப் பட்டுள்ளது.
- அனுமான வினாக்களைக் கொண்டதாக இருக்கும் இப்பரீட்சையில் திறமையாக சித்தியடையும் மாணவர்களுக்கு பரிசில்களும் சித்தியடையும் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- மாகாண மட்டத்தில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு எமது இலச்சினை பொறிக்கப்பட்ட பதக்கமும் தேசியமட்டத்தில் முதலிடம் பெறும் மாணவருக்கு 22K தங்கப்பதக்கமும் வழங்கப்படும்
- பரீட்சைக்கட்டணம் தலா 50 ரூபா வீதம் அறவிட்டு வே.நவமோகன் என்ற பெயரிற்கு வெள்ளவத்தை தபாலகத்தில் மாற்றத்தக்கதாக அனுப்பிவைக்க வேண்டும்.
- பரீட்சை வினாத்தாள்களை பரீட்சைக்கு இரு தினங்களுக்கு முன்னர் பாடசாலை அதிபருக்கு அனுப்பிவைப்போம்.
- பரீட்சை முடிந்தவுடன் அவற்றை அப்படியே பார்சல் செய்து திருத்துவதற்கு எங்களுக்கு அனுப்பிவைக்கவேண்டும்.
- கொழும்பு,யாழ்ப்பாண மாவட்டங்களில் தனிப்பட்ட ரீதியிலும் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவர்கள் 100 ரூபா வீதம் கட்டணம் செலுத்த வேண்டும்.
- இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்கள் 10ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

அன்னை புத்தகசாலை
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 9881, 077 2487662
(C-585)



BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி

**இலங்கை வங்கி**

**2011 / 2012 ஆண்டுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தக் காரர்களையும் தொழில்சார் நிபுணர்களையும் பதிவுசெய்தல்**

இலங்கை வங்கிக்கு 2011/2012 ஆண்டுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் தொழில்சார் நிபுணர்களையும் பதிவு செய்தல் தொடர்பாக 11.05.2010 அன்று வீரகேசரி, டெய்லி நியூஸ், தினகரன் பத்திரிகைகளில் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அவ்வறிவித்தலின்படி விண்ணப்பப்படிவம் வழங்கும் இறுதித்திகதி 07,07.2010 ஆகவும் முறையாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித்திகதி 21.07.2010 ஆகவும் பிற்போடப்பட்டுள்ளது.

தயவுசெய்து ஆர்வமுள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங்களை உடனடியாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:-
உதவிப்பொது முகாமையாளர்
(வடபிராந்தியம்)
இலங்கை வங்கி
உதவிப்பொது முகாமையாளர் காரியாலயம்
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி இல.
021 222 2735 / 021 222 3126 / 021 222 3945
**செயற்பாட்டு முகாமையாளர்**
(வடபிராந்தியம்)
(C-587)


## வெள்ளவத்தையில் திடீர் சோதனை

(கொழும்பு)

கொழும்பு, வெள்ளவத்தை பகுதியில் நேற்றுக்காலை இராணுவத்தினர் திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

வெள்ளவத்தை கடற்கரை வீதி, மற்றும் காலி வீதியில் பாதசாரிகள் மற்றும் வாகனங்கள் என்பன இடைநிறுத்தப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு, வெள்ளவத்தை பகுதி அதிக அளவில் தமிழர்கள் வசிக்கும் பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இச் சோதனை நடவடிக்கையின் போது யாரும் கைது செய்யப்பட்டார்களா? என்பது குறித்த தகவல்கள் இதுவரையில் வெளியாகவில்லை. (ச-5)

## தூத்துக்குடி-கொழும்பு...

கட்டமாகவும் பயணிகள் கப்பல் போக்குவரத்தைத் தொடங்க மத்திய கப்பல் போக்குவரத்து அமைச் சகம் திட்டமிட்டுள்ளது.

பயணிகள் கப்பல் போக்குவரத்தை அரசே நடத்தும் திட்டம் எதுவும் இல்லை. தனியார் கப்பல் நிறுவனங்கள்தான் இந்த பயணிகள் கப்பலை இயக்கும். இந்த திட்டத்தில் பயணிகள் விசா இல்லாமல் சென்று வரலாமா அல்லது விசா வேண்டுமா என்பதை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம்தான் முடிவுசெய்யவேண்டும்.

சேது சமுத்திரத் திட்டத்தில் தற்போது எந்த வித முன்னேற்றமும் இல்லை. உச்ச நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு நிலுவையில் இருப்பதால் எந்த பணியும் நடைபெறவில்லை. மாற்றுப்பாதையில் இந்த திட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பான சுற்றுச் சூழல் ஆய்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. (ச-5)

## புலிகளின்...

சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதன் போது மேற்படி நபர் தப்பிச் சென்றுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தப்பிச் சென்றவர் கிளிநொச்சியைச் சேர்ந்த 27 வயதான நித்தியானந்தன் ராசா என்பவர் எனவும் இவர் விடுதலைப்புலிகள் அமைப்பில் செயற்பட்டவர் எனவும் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ச-5)


28.06.2010 முதல்
**மாஞ்சா வேலு**
அருண் விஜய், பிரபு, கார்த்திக், விஜயகுமார் மற்றும் பலர் நடிப்பில்
செல்லா சினிமா (நாதன்ஸ்)
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.00, 9.00
(C-588)



யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

To Study in UK(London), Canada, Australia, Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now
100% நல்ல சம்பளம்

FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT
FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)
FOUNDATION DIPLOMA IN MANAGEMENT

எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு

- இக் கற்கை நெறிகளின் Diploma & Degree பட்டப்படிப்பை 100% விசா உத்தரவாதத்துடன் நீங்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளில் கற்கலாம்.
- உங்களுக்கான விசா உத்தரவாதத்தினை இத்துறையில் பல வருட அனுபவமுள்ள எமது சட்டத்தரணிகள் உறுதிசெய்வார்கள்.

கல்வித்தகமை : G.C.E. (O/L) போதுமானது
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் எம்மை தொடர்பு கொள்ளவும்

**Access Programming**

O/L முடித்த மாணவர்கள் அல்லது A/L லில் நல்லபெறுபேறுகள் அல்லாதவர்களும் இப்பாட நெறியினைப் பூர்த்தி செய்து Higher National Diploma & Degree போன்ற கற்கை நெறிகளைக் கற்று, Bsc, BBA, MBA பட்டதாரி ஆக முடியும்.

**IELTS** (International English Language Testing System)
(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
We guarantee minimum band 5.0 Upwards

**Spoken English with Grammar**

மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது IELTS, Spoken English ஆகிய பாடநெறிகள் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட தொழில்சார் நல்ல அனுபவமுள்ள ஆசிரியர்களால் நடாத்தப்படுகின்றது.
100 % பயிற்சி
100 % வெற்றி

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.
பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane
(Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0714299935

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
திகதி 03.07.2010, 04.07.2010, 10.07.2010
காலை : 10.00 மணி
மாலை : 04.00 மணி
அறிமுக வகுப்பில் மாணவர்கள் வசதிக்கேற்ற நேர அட்டவணை மேற்கொள்ளப்படும்.

# இன்று ஒரு தகவல்

## உண்மையும் தர்மமும்

எப்பொழுதும் உண்மையே பேச வேண்டும். அதுதான் நல்லது என்று ஒருத்தரிடம் சொன்னேன்.

உடனே அவர் என்னிடம் சண்டைக்கு வந்துவிட்டார்.

"சேர், உங்களுடைய உபதேசத்தை ஏமாந்தவர்கள் யாரிடமாவது சொல்லுங்கள். ஆளை விடுங்கள்" என்று சொல்லி விட்டு ஓடப் பார்த்தார்.

நான் விடவில்லை.

"என்ன விடயம் என்று சொல்லிவிட்டு அதன் பின் ஓடுங்கள்" என்றேன்.

அவர் சொன்னார்:

சேர், நான் போன வாரம் ரயில்வே ஸ்டேஷனில் ஒரு பெரிய சூட்கேஸ் உடன் நின்று கொண்டிருந்தேன். பக்கத்தில் ஒருத்தர் நின்று கொண்டிருந்தார். அவரிடம் இந்த சூட்கேஸை கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள். தண்ணீர் குடித்துவிட்டு வந்து விடுகிறேன்" என்றேன்.

"சரி" என்றார்.

நான் போய்த் தண்ணீர் குடித்துவிட்டுத் திரும்பி வந்து பார்த்தால் சூட்கேஸையும் காணோம். ஆளையும் காணோம் என்றார்.

"ஐயோ பாவம்" என்றேன்.

"உண்மையை பேசவேண்டும் என்று சொல்கிறீர்களே அதனால் வந்த கஷ்டம் தான் இது" என்றார்.

"எப்படி என்று கேட்டேன்.

பெட்டியைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று நான் சொன்ன போது பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்று அந்த ஆள் கேட்டார்.

நான் உண்மையைச் சொல்லி விட்டேன். 15 ஆயிரம் ரூபா பணம் இருக்கிறது என்று. இப்ப அவ்வளவும் போய்விட்டது. சேர்" என்று சொல்லி புலம்ப ஆரம்பித்தார்.

சத்தியம் பேசுவது உத்தமமான காரியம் தான். அதில் ஒன்றும் சந்தேகமில்லை. ஆனால் தர்மம் என்பது மிகவும் சூட்சுமமாக உள்ளது.

எது தர்மம் எது அதர்மம் என்று நமக்குப் புரிவதில்லை. அதனால் தான் சத்தியம் பேசுகிறேன் என்று சொல்லிவிட்டு சங்கடத்தில் மாட்டிக் கொள்கிறோம்.

கௌசிகர் என்று ஒரு முனிவர் இருந்தார். பொய் பேச மாட்டார்.

அவர் ஒரு காட்டில் இருந்தார். ஒருநாள் சிலபேர் பயந்து கொண்டு அந்தப்பக்கமாக ஓடி வந்தார்கள்.

"என்ன விடயம்?" என்று கேட்டார்.

"திருடர்கள் சிலர் எங்களைத் துரத்திக் கொண்டு வருகிறார்கள். அதுதான் இந்தப் பக்கமாக ஓடிவந்தோம்" என்று சொல்லிக் கொண்டே ஓடிப்போய் புதர் மறைவில் ஒளிந்து கொண்டார்கள்.

அவர்கள் ஒளிந்திருக்குமிடம் முனிவருக்குத் தெரியும். சிறிது நேரத்தில் அந்த திருடர்களும் அந்தப் பக்கமாக வந்தார்கள்.

அவர்கள் முனிவரைப் பார்த்தார்கள். அவர் பொய்யே பேசாதவர் என்பது அவர்களுக்குத் தெரியும்.

"சுவாமி, நீங்கள் பொய்யே சொல்லாதவர். அதனால் எங்களுக்கு ஒரு உண்மையை நீங்கள் சொல்ல வேண்டும். எங்களுக்குப் பயந்து கொண்டு சிலபேர் இந்தப் பக்கமாக ஓடிவந்தார்கள். அவர்கள் எங்கே ஒளிந்து கொண்டு இருக்கிறார்கள்? என்று கேட்டார்கள்.

முனிவர் தான் பொய் சொல்லமாட்டாரே, உடனே அவர்கள் ஒளிந்திருக்கும் இடத்தைக் காட்டிக் கொடுத்து விட்டார். திருடர்கள் நேராகப் போய் அவர்களைக் கொன்று விட்டு அவர்களிடமிருந்ததையெல்லாம் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

உண்மை பேசிய அந்த முனிவர் சொர்க்கத்துக்குப் போகவில்லையாம். நேராக நரகத்துக்குப் போய்விட்டாராம்.

இந்தக்கதையை ஸ்ரீ கிருஷ்ணர் சொன்னார். அதைக் கேட்ட அர்ச்சுனனுக்கு இது ஆச்சரியமாக இருந்தது.

"இது என்ன வேடிக்கையாக இருக்கிறது. சத்தியம் சொன்னதுக்கு நரகமா?" என்று கேட்டான்.

அதற்கு கிருஷ்ணர் சொன்னார் :

உன்மை பேசுவதால் ஏற்படும் ஒரு நன்மை பொய் பேசுவதால் ஏற்படுமானால் அந்தச் சமயத்தில் பொய்தான் உண்மை.

அதேபோல் பொய் பேசுவதால் ஏற்படும் ஒரு தீமை உண்மை பேசுவதால் கிடைக்குமானால் அந்த நேரத்தில் அந்த உண்மை தான் பொய்.

எந்தத் தர்மமாக இருந்தாலும் சரி, அதனால் இன்னொருவருக்கு துன்பம் விளையுமானால் அது அதர்மம்.

சத்தியம் பேசுவதால் ஒரு தீமை விளையும் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தச் சமயத்தில் மௌனமாக இருந்துவிடுவது தான் நல்லது. அப்படியிருக்க முடியவில்லையானால் பொய் சொல்லலாம். அதனால் பாவமில்லை என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மானிப்பாய் இந்துவின் நூற்றாண்டு விழாவை முன்னிட்ட போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, சிறுகதை போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்கள் மற்றும் ஆறுதல் பரிசைப் பெற்றுக் கொண்ட பாடசாலைகளின் விபரம் வருமாறு.

**கட்டுரை**

இ.ஆரூரணி (மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர்தரப்பாடசாலை), ந.துஷாந்தி (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), ம.நிலாணி (மானிப்பாய் மகளிர் கல்லூரி),

**ஆறுதல் பரிசில்கள்**

இ.ஆன்அர்ச்சனா(மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஸ்ரீ.ரம்மியா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), நி.தர்ஷினி (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), ப.ரூபனீ (கொக்குவில் இந்துக்கல்லூரி), சொ.தருமதன் (யூனியன் கல்லூரி),

**கவிதை**

க.லாவண்யா (கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம்), அ.அறிவகன் (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), ஸ்ரீ.நிரோஜா (மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை),

**ஆறுதல் பரிசில்கள்**

ம.அபிராமி (கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம்), ந.தனுஷ்கா (கொழும்பு திருக்குடும்ப கன்னியர் மடம்), அ.அனற்றொய்சி (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), கி.பிறைநிலா (கொக்குவில் இந்துக்கல்லூரி), செ.யபனா (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி),

**சிறுகதை**

ந. சோமியா (மட்டக்களப்பு பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயம்), அ.மீரா (இந்து மகளிர் கல்லூரி), திருமதி ஆரபி சிவகுகன் (கொக்குவில் இந்துக்கல்லூரி (ஆசிரியர்) (6-4)

# மின்சாரசபை ஊழியர்களுக்கு சீருடை

(குருநகர்)

இலங்கை மின்சாரசபை மின் சேவையாளர் பணிமனையைச் சேர்ந்த மின்சாரம் ஊழியர்களுக்கு வடமாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் ஆர். முத்துரட்ணானந்தனின் ஏற்பாட்டில் மின்சார சபை செயற்பாடுகளின் நிமித்தமாக சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டமானது கடமை நேரங்களில் பொதுமக்களுக்கு வசதியான முறையில் செயற்பட உதவும் எனத் தெரியவருகின்றது. (6-39)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய நிலையம் மற்றும் யு.என்.டி.பி. நிறுவனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் சிவில் சமூகங்களூடாக மனித உரிமையை மேம்படுத்தல் தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு 657/1 , ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள தொடர்பகத்தில் நடைபெறவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ் அறிவித்துள்ளார். (6-4)

# உயர் தொழிநுட்பவியல் நிறுவன மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் 2009 ஆம் ஆண்டு தமது கற்கை நெறிகளை முழுமையாகப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா எதிர் வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளதால் தகமை உடைய மாணவர்கள் 2 ஆயிரம் ரூபாவை கணக்கு இலக்கம் 0251 00133397613, SLIATE மக்கள் வங்கி Hyde Park Corner, Colombo-02 என்ற கணக்கில் வைப்பிலிட்டு அதற்குரிய பிரதியை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக அலுவலக நேரத்தில் பதிவாளர் அலுவலகத்தில் நேரடியாக கையளித்து மேலதிகமாக உள்ள ஆவணங்களை பூர்த்தி செய்து வழங்குமாறு நிறுவன பதிவாளர் ந.உமாகாந்த் அறிவித்துள்ளார். (6-4)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை பிரதான வீதியில் வீதி அகலமாக்கும் பணிகளுக்காக மின்சார விநியோக தூண்களை இடமாற்றம் செய்யவிருப்பதால் நாளை ஞாயிற்றுக்கிழமையும் எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு மற்றும் வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் மின்சாரம் தடைப்படும் என இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் மின் பொறியியலாளர் அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மின் மாற்றிகளில் பராமரிப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை உரும்பிராய் , கேண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம் மற்றும் திருநெல்வேலிப் பிரதேசம் ஆகிய இடங்களுக்கு மின்சார விநியோகம் தடைப்படும் எனவும் வேலைகள் முற் கூட்டியே முடிவடைந்தால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் மின்சாரம் வழங்கப்படும் என யாழ். மின்சார சபை அலுவலகம் அறிவித்துள்ளது. (6)

# இராசி பலன்

03 .07.2010
(ஆனி 19, சனிக்கிழமை)
சப்தமி பின்னிரவு 4.57 மணிவரை
பூரட்டாதி பிற்பகல் 12.31 மணிவரை
இராகுகாலம் 8.57-10.27 மணிவரை
சுபநேரம் 2.57-4.27 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | அமைதிக்குறைவு, அதிக பிரயாசை , போசன சுகம் , திடீர் பயணம். |
| இடபம் | முயற்சி கைகூடும் , தேகநலன் , பொருள் சேர்க்கை , கௌரவமான நிலை. |
| மிதுனம் | கடின உழைப்பு , நல்ல வரவேற்பு , பொருள் சேர்க்கை , முயற்சி கைகூடும். |
| கடகம் | ஆன்றோர் சந்திப்பு , அதிக பிரயாசை , பயந்த சுபாவம் , முயற்சி தாமதம். |
| சிங்கம் | எதிர்பாராத அச்சம் , தொழில் விருத்தி , போசன சுகம் , முயற்சி தாமதம். |
| கன்னி | திடீர் பயணம் , பணவருவாய் , காரியநன்மை , உறவினர் வருகை. |
| துலாம் | பகைவர் நேசம் , உற்சாகம் , முயற்சி கைகூடும் , பொருள் சேர்க்கை |
| விருச்சிகம் | காரிய இடையூறு , குடும்பக் கவலை , தனவிரயம் , போசன சுகம். |
| தனுசு | பயந்த சுபாவம் , தொழில் சிந்தை , சுபசெலவு , நல்ல முயற்சி. |
| மகரம் | காரிய நன்மை , பிரயாண சுகம் , தனவருவாய் , சகோதரர் உதவி. |
| கும்பம் | கடின வார்த்தை , முயற்சி தாமதம் , வாகன பயம் , தனவிரயம். |
| மீனம் | சிந்தனை மிகுதி , போசனசுகம் , புதிய முயற்சி , நண்பர்கள் சந்திப்பு |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 150 | 120 | 150 |
| தக்காளி | 80 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | 80 | 80 | 80 |
| கரட் | 120 | 140 | 130 |
| பூசனி | 50 | 40 | 40 |
| புடோல் | 20 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 110 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 70 |
| பாகற்காய் | 80 | 130 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 80 |
| பயற்றங்காய் | 60 | 90 | 70 |
| லீக்ஸ் | 140 | 130 | 150 |
| பீற்றூட் | 90 | 80 | 90 |
| கறிமிளகாய் | 120 | 120 | 130 |
| முருங்கைக்காய் | 140 | 250 | 250 |
| போஞ்சி | 90 | 90 | 90 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 15-20 | 20 | 20 |
| தேசிக்காய் | 120 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30 | 23 |




யாழ்ப்பாணம் கார்மேல் முன்பள்ளிப் பாடசாலையின் கண்காட்சி நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களினால் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினராக்க் கலந்துகொண்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையின் உபதலைவர் வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-நல்லூர் நிருபர்)

# விளையாட்டு விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரில் உள்ள புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய விளையாட்டு விழா நாளை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வானது, நிலையத்தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளதுடன் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலாளர் செ.சீனிவாசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இங்கு விசேட நிகழ்வாக வெளிநாட்டு அன்பரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பாண்ட் வாத்திய இசைக் கருவிகளை நிலைய மாணவர்கள் இசைத்து விருந்தினரை வரவேற்கவுள்ளனர். (6-29)

# மஹோற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சங்கத்தானை அருள்மிகு வைரவர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவம் நேற்று ஆரம்பமாகியுள்ளது. இதில் எதிர்வரும் 6 ஆம் திகதி மாம்பழத் திருவிழாவும் 8 ஆம்திகதி வேட்டைத் திருவிழாவும் மறுநாள் சப்பறமும் 10 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (6-29)

# புலோலி கதிரவேற்பிள்ளை வீதி விரைவில் புனரமைக்கப்படும்

## வலம்புரியின் செய்திக்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை புலோலி மேற்கு கதிரவேற்பிள்ளை வீதியை துரிதமாக புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என கடந்த 29 ஆம் திகதி வலம்புரி செய்தி பிரசுரித்திருந்தது.

இதற்கமைய இவ்வீதியானது இவ்வருடம் கெயார் நிறுவனத்தின் நிதியுதவியுடன் புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை நகரசபை செயலாளர் அ.அ.நடராஜா அறிவித்துள்ளார். (6-5)

# சாதாரண தர மாணவர்களுக்கு

(அல்வாய்)

க.பொ.த சாதாரண தரம் பயிலும் மாணவர்களுக்கான தமிழ்பாட செயலட்டை நாளை மறுதினம் திங்கட்கிழமை வடமராட்சியிலுள்ள சகல பாடசாலைகளிலும் நடைபெறவுள்ளது. செயலட்டைகளை தத்தம் கோட்டக் கல்வி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளுமாறு தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.சுதாமதி நந்தபாலன் அறிவித்துள்ளார். (6-19)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீராவியடி ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைத்தியநாதன் தேவஸ்தான (கடையிற் சுவாமி கோவில்) அலங்கார உற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

இதில் நாளை ஞாயிற்றுக்கிழமை கும்பாபிஷேகதின 1008 சங்காபிஷேகமும் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை 108 சங்காபிஷேகமும் நடைபெற்று மாலை திருக்கல்யாணம், திருவூஞ்சல் பாடப்பெற்று பெருமான் அழகிய பூந்தண்டிகையில் வலம் வரும் காட்சியும்இடம்பெறவுள்ளது. (6-4)

# வடமாகாண பாடசாலை மட்ட சதுரங்கச் சுற்றுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையேயான சதுரங்கச் சுற்றுப் போட்டி அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. அவற்றின் விபரம் வருமாறு,

**18 வயது கீழ் பிரிவு**

**ஆண்கள்**

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி ,தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி

**19 வயது கீழ் பிரிவு**

**ஆண்கள்**

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**15வயது கீழ் பிரிவு**

**பெண்கள்**

அளவெட்டி அருணோதயக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உ/த.பாடசாலை, யாழ் இந்து மகளிர் கல்லூரி

**19 வயது கீழ் பிரிவு**

**பெண்கள்**

யாழ்.இந்து மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

இப்பாடசாலை அணிகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம்நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்ற தகுதி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

# உலக வங்கி வீட்டுத் திட்டத்தின் மூலம் வீடுகள் அமைப்பு

(நல்லூர்)

கடந்த கால போர்சூழலினால் வளலாய் கிராமத்தில் முற்றாக சேதமடைந்த கோப்பாய் வீட்டு உரிமையாளர்களுக்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்ராஸின் துரித முயற்சியால் உலகவங்கி வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் 75 வீதமான குடும்பங்கள் வீட்டுத் திட்டத்தின் கீழ் உதவியை பெற தகுதி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4-134)

# பொதுக்கூட்டம்

நல்லூர் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இல.109, பருத்தித்துறை வீதி , அரசடி சந்தி, நல்லூரில் அமைந்துள்ள சமூக அபிவிருத்தி ம்ன்றத்தில் சமாசத் தலைவர் கா.தில்லையம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சங்கங்களிலிருந்து 3 உறுப்பினர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு சமா்சத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (6-4)

# நிறுவன தினமும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் மருதனார் மடம் விவசாய நிறுவனம் ஆகியவற்றின் 24 ஆவது நிறுவன தினமும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வட்டுக்கோட்டை தொழில்நுட்ப நிறுவனத்தின் ஏபில் மண்டபத்தில் நிறுவன சபை தலைவரும் முன்னாள் தென்னிந்திய திருச்சபை பேராயருமான கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம அதிதியாக யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.ஜே.எம்.சகாயன், வைத்திய கலாநிதி திருமதி லுசிண்டா சகாயன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6)

# லண்டனிலிருந்து உறவினரை பார்ப்பதற்கு யாழ்.வந்தவர் விபத்தில் மரணம்

(யாழ்ப்பாணம்)

லண்டனில் இருந்து உறவினரை பார்ப்பதற்காக யாழ்ப்பாணம் வந்தவர் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் சிக்கி மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தில் ஏழாலையை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான பி.றொபின் (வயது-36) என்பவரே மரணமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை 3.00 மணியளவில் வீசிப்பகுதியூடாக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதியதில் மரணமடைந்துள்ளார். பிரஸ்தாப நபரின் சடலம் தெல்லிப்பழை வைத்தியசாலையில் வைக்கப்பட்டதுடன் மரண விசாரணைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (6-7)




# டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் சுகாதாரப் பகுதியினர் மும்முரம்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கைகளில் சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வடமராட்சியில் இவ் உத்தியோகத்தர்கள் வீடு வீடாகச் சென்று வீடுகளில் சுகாதாரம், சுத்திகரிப்பு நிலைமைகளை அவதானிப்பதோடு, அவர்களுக்கு டெங்குநோய்கள் பற்றிய அறிவுரைகளையும் வழங்கி வருகின்றனர்.

தற்போது நுளம்பின் தாக்கம் இப்பகுதிகளில் காணப்படுவதால் அதிலிருந்து மக்களைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கில், மக்கள் மத்தியில் அறிவுரைகளை, வழங்கி வருகின்றனர்.

இவர்கள் வீட்டுத் தரிசனங்கள் செய்யும் போது, சில வீடுகளில் சுகாதாரக் குறைவு காணப்படும் இடங்களில் அது சம்பந்தமாக உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6-10)

# வடக்கு - கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

உலகவங்கியின் அனுசரணையுடன் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையினால் மக்கள் பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வடக்கு- கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத்திட்ம் தொடர்பாக பொதுமக்களால் வழங்கப்பட்ட முன்மொழிவுகளை சபையின் தலைமையலுவலகத்தின் திட்டமிடல் பிரிவிலும், உப அலுவலகங்களான மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம் (ஆனைக்கோட்டை) , ளபண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் ஆகியவற்றிலும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக திட்டமிடல் பிரிவிலும் மக்கள் பார்வையிட்டு கையொப்பத்தை இடுவதுடன், மேலதிக திட்ட முன்மொழிவுகள் இருக்கும் பட்சத்தில் அவற்றையும் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (6-4)

# இலங்கையின் அச்சுறுத்தல்களுக்கு காரணம் கற்பிக்கும் ஐ.நா.அலுவலகம்

## இன்னர்சிற்றி பிறஸ் விமர்சனம்

(கொழும்பு)

ஐக்கியநாடுகள் ஸ்தாபன ஊழியர்களை இலங்கை அச்சுறுத்தும் போது நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம் அதற்கான காரணங்களை கற்பித்துக் கொண்டிருப்பது இந்த கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு என்ற காந்தியமா என்று இன்னர் சிற்றி பிறெஸ் கேள்வி எழுப்பியுள்ளது.

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் நியமித்துள்ள விசாரணைக் குழுவை அவர் கலைக்கும் வரை இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தை முற்றுகையிட்டு அங்கு பணியாற்றும் ஊழியர்களை பணயமாக வைத்திருக்குமாறு அமைச்சர் விமல் வீரவன்ஸ மக்களிடம் கேட்டுள்ளார்.

சூடானிலோ வேறெந்த நாட்டிலோ இவ்வித கோரிக்கை விடுக்கப்பட்டால் அது குறித்து கண்டனம் தெரிவிப்பது போல இலங்கை விடயத்தில் கண்டிக்காமல் அமைச்சர் பேசியதை ஊடகங்கள் தவறாக பிரசுரித்திருக்கலாம் என்று ஐக்கிய நாடுகள் இணைப் பேச்சாளர் பர்ஹான் ஹக் காரணம் கற்பித்திருக்கிறார் என்றும் இன்னர் சிற்றி பிறெஸ் குற்றம் சாட்டியுள்ளது.

அமைச்சர் வீரவன்ஸவின் கருத்து அவரது தனிப்பட்ட அபிப்பிராயம் என்று ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்ததாக ஹக் கூறியுள்ளார்.

விசாரணைக் குழுவினருக்கு விசா வழங்குவதில்லை என்று ஏற்கனவே தெரிவித்த இலங்கை அரசாங்கத்தின் கூற்றையும் அரசாங்க அமைச்சரின் கூற்றையும் ஐக்கிய நாடுகள் அலுவலகம் எவ்வாறு வேறுபடுத்தி நோக்க முடியும் என்று இன்னர் சிற்றி பிறெஸ் கேள்வி எழுப்பியுள்ளது.

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் முன்னால் எவராவது கூடுவது குறித்து அங்கிருந்து அறிக்கை எதுவும் கிடைக்கவில்லை என்றும் ஹக் தெரிவித்தார். யார் அறிக்கை அனுப்புவது? கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பு அதிகாரி நீல் பூனேதானே?

ஆனால் அவர்தான் கடந்த வருடம் இலங்கையில் பணியாற்றிய ஐக்கிய நாடுகள் திட்ட பணியாளர்களை அரசாங்கம் சிறையில் அடைத்து சித்திரவதைக்கு உள்ளாக்கிய போது மௌனம் சாதித்துக் கொண்டிருந்தவர் என்றும் இன்னர் சிற்றி பிறெஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன் பின்னர் கடந்த புதன் கிழமை இலங்கையின் பயமுறுத்தல் குறித்து மிகவும் சிரேஷ்ட ஐக்கிய நாடுகள் அதிகாரி ஒருவரிடம் இன்னர் சிற்றி பிறெஸ் கேட்டபோது அவர் அதற்குப் பதிலளிக்கையில்,

அமைச்சர் வீரவன்ஸவின் கோரிக்கை உண்மையில் காந்திய சிவில் ஒத்துழையாமை இயக்கத்தைப் போன்றது என்று அவர் அதனை நியாயப்படுத்தினார். அது வன்முறையல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

அப்படியானால் இலங்கை அரசாங்கம் பாராட்டப்பட வேண்டியதே.

விசாரணைக்குழு பணியாற்ற வேண்டிய விதிமுறைகள் பொது மக்களுக்கு வெளிப்படுத்தப்படுமா என்று பிறெஸ் கேட்டபோது, அது வெளியிடப்படமாட்டாது என்று ஹக் பதிலளித்தார்.

இது ஒரு ஆலோசனைக்குழு என்றும் அதன் ஆலோசக செயற்பாட்டுக்கு அப்பால் செயற்படும் அமைப்பு அல்ல என்றும் அவர் கூறினார்.

மேலும் ஒரு புதுத் தகவலையும் ஹக் வெளியிட்டார்.

அதாவது, விசாரணைக்குழு எழுத்து மூலமான அறிக்கை ஒன்றை முடிவில் தயாரிக்காமல் இருக்கவும் கூடும் என்றும் அவர் கூறினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)


BRITISH COLLEGE OF HIGHER STUDIES &

EXPRESS INTERNATIONAL STUDIES & CONSULTANTS

ஆகிய இவ்விரு சகோதர நிறுவனங்களும் இணைந்து
எமது நிறுவனத்தின்மூலம் Student Visaவினைப் பெற்று
London (UK) சென்ற அனைத்து மாணவர்களையும்
பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

எமது யாழ். கிளையிலே அடிப்படைக் கற்கைநெறிகளை நிறைவுசெய்து இவ்வருடத்திலே
இதுவரை (UK) London Visa பெற்று சென்ற பல மாணவர்களிற் சிலர்





இதுவரை எமது சேவையினூடாக இலங்கையிலிருந்து 1200க்கு மேற்பட்ட மாணவர்கள் LONDONல் உயர்கல்வியினைக் கற்பதற்காக UK Visa வினைப் பெற்றுச்சென்றுள்ளார்கள். நீங்களும் அவர்கள்போற் சென்று கல்விகற்று முன்னேற வேண்டுமா?... உங்களின் நல்ல எதிர்காலத்துக்கும் முன்னேற்றத்திற்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்....

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550, 0773501499

No.30 1/14, W A De Silva Mw,
Colombo - 06
Tel : 0112500207, 0777222422, 0714299935


## இணுவில் கந்தசுவாமி கோவில் மஹோற்சவம்





### பதினேழாம் திருவிழா

### திருவீதி வருகின்ற அழகே அழகு

இணுவையம் பதியின் ஆளும் வேலவன் –அவன்
இன்னல்கள் தீர்த்திடும் ஆறுமுகன்

கானமுடன் தவில் நாதம் முழங்க –கவின்
கலை நயம் மிளிரும் திருமஞ்சத்திலே
கார்த்திகை மைந்தன் திருமுருகன் – அவன்
திரு வீதி வருகின்ற அழகே அழகு

தஞ்சமென வரும் அடியவர் – தம்
நெஞ்சம் நிறைந்த வடிவேலவனின்
விஞ்சிடும் புகழ்தனைப் பாடிடவே – மனம்
பொங்கியே ஆனந்தம் பாடிடுமே

கீழை இணுவையில் அம்மை அப்பன் – அருகினில்
அண்ணன் செகராச சேகரக் கணபதியின்
அருளுடன் இருமாதர் துணையும் கொண்டு
இன்னல்கள் தீர்ப்பான் இணுவைக் கந்தன்

இணுவை சுகந்தி

### அற்புதமாய் வருவான் கையில் வேலுடனே

பற்பலரும் போற்றும் பதியாமிணுவிலுறை
கந்தன் கலியுகவரதன் அவன்
அற்புதமாய் வருவான் கையில் வேலுடனே
மயில் மீதமர்ந்த வள்ளல்
சொற்பதங் கடந்த சோதியாயச் சுடரும்
தோன்றுவான் பக்தர் தமக்கு
அற்பர் தமை அழிப்பான் அடியவரைக்
காப்பான் தன்னை வணங்குவமே நாளும்

(1709) திருமதி வை. கணேசபிள்ளை

உலகின் எப்பாகத்திலுமிருந்து இணுவைக் கந்தனை தரிசிக்க Inuvil kanthan.com

# இலங்கைக்கு எதிராக செயற்படுவோரை கைதுசெய்து நாடு கடத்த உக்ரேன் உறுதி

இலங்கைக்கு எதிராகப் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுவோரை கைது செய்து நாடு கடத்துவதாக உக்ரேன் அரசாங் கம் உறுதியளித்துள்ளது.

உக்ரேனுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்நாட்டு முக்கிய பாதுகாப்புத் துறை அதிகாரிகளை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதையடுத்து இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை உக்ரேன் இராணுவப் பயிற்சி முகாம்களில் இலங்கைப் படை அதிகாரிகளுக்கும், படைவீரர்களுக்கும் பயிற்சி வழங்கப்படவுள்ளதுடன்,

இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் விசேட ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. (6)

### ஐ.நா.சபை தொடர்பில்

# விமல் வீரவன்சவின் கருத்து கண்டிக்கப்பட வேண்டியது

### கரு ஜயசூரிய தெரிவிப்பு



ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை கிளையை பொதுமக்கள் முற்றுகையிட வேண்டுமென அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவர் வெளியிட்டுள்ள கருத்து கண்டிக்கப்பட வேண்டியதென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் கிளைக் காரியாலயத்தை முற்றுகையிட்டு அதன் ஊழியர்களை வீட்டுக்காவலில் வைக்கவேண்டுமென வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச அண்மையில் நாட்டு மக்களிடம் கோரியிருந்ததாகவும் இது நாட்டு மக்களை பிழையான வழியில் இட்டுச் செல்லக்கூடுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகளினால் இலங்கை தொடர்பான சர்வதேச நன்மதிப்பு மேலும் வீழ்ச்சியடையக்கூடும் எனவும் இலங்கை கடும் போக்குடைய நாடுகள் பட்டியலில் உள்ளடக்கப்படும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (6)






சாவகச்சேரி கிராம்புவில் பாலமுருகன் முன்பள்ளியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் முன்பள்ளி மாணவர்கள் சத்தியப்பிரமாணம் செய்வதையும் மாகாணக் கல்வி அமைச்சின் ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர் சீ.கமலநாதன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவர்களின் வினோத உடை நிகழ்வினையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

# பஸ்களில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்கள்

(பருத்தித்துறை)

வவுனியாவில் மக்கள் பயணிக்கும் பஸ்களில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்திருப்பதால் பயணிகள் அச்சமடைகின்றனர்.

குறிப்பாக வவுனியாவில் இருந்து செட்டிகுளம் போகும் பஸ்ஸில் சிலர் பிக்பொக்கட் கைவரிசையை காட்டுகின்றனர். இவ்வாறான திருட்டுச் சம்பவம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பஸ்களில் நிறைந்த பயணிகளுடன் பிரயாணம் செய்யும் போது திருடர்கள் இதனை தருணமாக வைத்து மிகத் துல்லியமாக, நகைகள், அடையாள அட்டைகள் என்பவற்றை திருடி விடுகின்றனர்.

இதேவேளை மன்னார் வீதியில் உள்ள ஒரு தடுப்பு முகாமில் மகனைப் பார்க்க சென்ற பெற்றோரிடம் திருடர்கள் தமது கை வரிசையைக் காட்டுவதற்கு தயங்கவில்லை. தனது மகனுக்கு எடுத்துச் சென்ற உணவு வகைகள், உடுப்புகள் மற்றும் பணம் என்பவற்றை இழந்துள்ள சம்பவமும் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (6-10)

# பாடசாலை மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டி

(அல்வாய்)

வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு ஒவ்வொரு பாடசாலைகளிலுமிருந்தும் ஒவ்வொரு பிரிவிலும் ஒரு மாணவரைத் தெரிவுசெய்து எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பத்தை அனுப்பிவைக்குமாறும் வலயமட்டப் போட்டிகள் யாவும் செப்ரெம்பர் மாதம் 18 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் எனவும் வடமராட்சி வலயக் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார்.

போட்டிகள் பற்றிய விபரம் வருமாறு,

இப்போட்டியில் அதி கீழ் பிரிவாக தரம் 6-7 இற்கு 1 தொடக்கம் 5 அதிகாரங்களும் கீழ்ப் பிரிவாக தரம் 8-9 இற்கு 6 தொடக்கம் 15 அதிகாரங்களும் மத்திய பிரிவாக தரம் 10- 11 இற்கு 16 தொடக்கம் 30 அதிகாரங்களும், மேற்பிரிவாக தரம் 12-13 இற்கு 31 தொடக்கம் 50 அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் போட்டி நிபந்தனையாக ஒவ்வொரு பிரிவுக்கும் வழங்கப்பட்ட அதிகாரங்களில் நடுவர் கேட்கும் ஒரு அதிகாரத்தில் 10 குறட்பாட்களையும் கூறவேண்டும் எனவும் ஏனைய அதிகாரங்கள் திருவுளச்சீட்டு மூலம் எடுக்கப்பட்டு அதில் வரும் குறட் பாக்களில் 3 குறட்பாக்களைக் கூறவேண்டும் திறருக் குறளில் பொருள்கேட்கப்படமாட்டாது எனவும் திருக்குறளில் ஒரு சொல்லைக்கூட நடுவர்கள் உச்சாடனம் செய்யமாட்டார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6-4-19)

# வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்குப் பொருத்தமான அட்டவணையில் காட்டப்பட்டவாறான இக்ராட் (ICTAD) உடைய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழே சுட்டிக்காட்டப்பட்ட கேள்விக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்தி படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

1.கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : - 05.07.2010 - 14.07.2010 பி.ப 2மணிவரை
2.கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 15.07.2010 நண்பகல் 12 மணிவரை
3.கேள்வி திறக்கப்படும் திகதி :- 15.07.2010 பி.ப 2 மணி
(திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4.கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
5.மூல கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம், மானிப்பாய் என்ற முகவரிக்கோ அல்லது தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ 2ம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். ஒரு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
6.வேலைகள் யாவும் ஒப்பந்தம் கைச்சாத்தாகியதிலிருந்து இரு மாத காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டும்.
7. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் (வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்) பெற்றுக்கொள்ளமுடியும்.

| இல. | வேலை விபரம் | இக்ராட் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்க முடியாதது | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | கேள்விப் பத்திரப் பணம் | NBT வரி 3% | VAT வரி 12% |
| 1 | மானிப்பாய் பட்டின சபை வீதி மீள்புனரமைப்பு | C9 | 14500.00 | 500.00 | 15.00 | 61.80 |
| 2 | மானிப்பாய் கிராம உபஅலுவலகமும் நூல் நிலையமும் மீள்புனரமைப்பு | C10 | 6000.00 | 500.00 | 15.00 | 61.80 |
| 3 | பண்டத்தரிப்பு சென்மேரீஸ் பாலர் பாடசாலை கட்ட அபிவிருத்தி வேலை | C10 | 6000.00 | 500.00 | 15.00 | 61.80 |
| 4 | மானிப்பாய் கிராம உப அலுவலக உள்ளக வீதி மீள் புனரமைப்பு | C10 | 2500.00 | 500.00 | 15.00 | 61.80 |
| 5 | நவாலி நாச்சிமார் கோவில் வீதி மீள் புனரமைப்பு (மிகுதி வேலை) | C9 | 13600.00 | 500.00 | 15.00 | 61.80 |
| 6 | இணுவில் மதவடி இணைப்பு ஒழுங்கை மீள் புனரமைப்பு | C9 | 12300.00 | 500.00 | 15.00 | 61.80 |
| 7 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை உள்ளக வீதி அமைத்தல் | C10 | 1000.00 | 500.00 | 15.00 | 61.80 |
| 8 | மானிப்பாய் மெமோறியல் வைத்தியசாலை இணைப்பு ஒழுங்கை பராமரிப்பு வேலை | C10 | 1600.00 | 500.00 | 15.00 | 61.80 |
| 9 | சில்லாலை புனித செபஸ்தியார் வீதி மீள் புனரமைப்பு | C9 | 10700.00 | 500.00 | 15.00 | 61.80 |

திருமதி பு.சிவலிங்கம்,
செயலாளர்,
வலிதென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(C-586)

# தனியார் பேருந்து கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

(கொழும்பு)

தனியார் பேருந்துக் கட்டணங்கள் எந்த வகையிலும் உயர்த்தப்படமாட்டாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உறுதியளித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பல தனியார் போக்குவரத்துச் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய போது அந்த தொழிற்சங்கங்கள் தமது நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டதாக ஆணைக்குழுவின் தலைவர் சசி வெல் கம தெரிவித்துள்ளார்.

எனினும் அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சம்மேளத்தின் பொதுச் செயலாளர் அஞ்சனப்பிரிய ரஞ்சித் கருத்து தெரிவிக்கையில், தற்போதைய ஆகக் குறைந்த கட்டணமாகவுள்ள 6 ரூபாய் 1 ரூபாய்ால் அதிகரிக்கப்பட வேண்டும் என தாம் கோரியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தமது கோரிக்கை அமுல் படுத்தப்படாவிட்டால் 7 நாட்களுக்குப் பின்னர் தாம் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற் கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (6)

# பயணிகளிடம் கொள்ளையிட்ட முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் கைது

(கொழும்பு)

பயணிகளிடம் கொள்ளையிட்ட முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் பஸ் பயணிகளின் பணத்தைக் கொள்ளையிட்டு தனது வாழ்க்கையை முன்னெடுத்து வந்ததாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இவர் ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த போது சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயணி ஒருவருடைய பணப்பையை களவாட முயற்சி மேற்கொண்ட போது பயணிகள் இணைந்து குறித்த நபரை பிடித்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் விசாரிக்கையில், சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ள காரணத்தினால் வாழ வழியின்றியே தாம் இவ்வாறு கொள்ளையில் ஈடுபட்டு வந்ததாக அவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

(6)

# முதல் கட்டமாக தூத்துக்குடி-கொழும்பு இடையிலான கப்பல் போக்குவரத்து சேவை

## இந்திய மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சரகம் திட்டம்

தூத்துக்குடி- கொழும்பு இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிப்பது குறித்து மத்திய அரசு தீவிரமாக ஆய்வு செய்து வருவதாக மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை செயலர் கே.மோகன் தாஸ் தெரிவித்தார்.

தூத்துக்குடி துறைமுகத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட அவர் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

தூத்துக்குடி-கொழும்பு இடையிலான கப்பல் போக்குவரத்தை தொடங்குவதற்கான நடைமுறைகள் குறித்து, மத்திய அரசு தீவிரமாக ஆய்வு செய்து வருகின்றதென்றும் தூத்துக்குடி-கொழும்பு இடையே முதல் கட்டமாகவும் இராமேஸ்வரம்-தலைமன்னார் இடையே இரண்டாம் கட்டமாகவும் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

பயணிகள் கப்பல் போக்குவரத்தை அரசே நடத்தும் திட்டம் எதுவும் இல்லை. தனியார் கப்பல் நிறுவனங்கள் தான் இந்த பயணிகள் கப்பலை இயக்கும்.இந்த திட்டத்தில் பயணிகள் விசா இல்லாமல் சென்று வரலாமா அல்லது விசா வேண்டுமா என்பதை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தான் முடிவு செய்ய வேண்டும்.

சேது சமுத்திர திட்டத்தில் தற்போது எந்த வித முன்னேற்றமும் இல்லை. உச்சநீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு நிலுவையில் இருப்பதால் எந்தப் பணியும் நடைபெறவில்லை.மாற்றுப் பாதையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பான சுற்றுச் சூழல் ஆய்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்தத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிப்பது உள்ளிட்ட எந்த நடவடிக்கையும் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிவந்த பின்னர்தான் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

(6)

# நாடளாவிய ரீதியில் பாடசாலை மட்ட முன்னோடி புலமைப்பரிசில் பரீட்சை

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களை பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்கான முன்னோடிப் பரீட்சையை ஆசிரியர் வே.நவமோகனின் வழிகாட்டலில் காயத்திரி பப்ளிகேஷன் நிறுவனம் நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00மணி முதல் 12 மணி வரை நடத்தவுள்ளது.

இரண்டு பகுதி வினாத்தாள்களைக் கொண்ட இப்பரீட்சை அனுமான வகுப்புக்களைக் கொண்டதாக இருக்கும். இப்பரீட்சையில் திறமையாகச் சித்தியடையும் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அன்னை புத்தகசாலை இல.7, நவீன சந்தை,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறும் தனிப்பட்ட முறையில் தோற்ற விரும்பும் மாணவர்களும் தொடர்பு கொள்ளலாம் எனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

அத்துடன் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு இலச்சினை பொறிக்கப்பட்ட பதக்கங்களும் தேசியரீதியில் சித்தியடையும் மாணவருக்கு காயத்திரி பப்ளிகேஷன் இலச்சினை பொறிக்கப்பட்ட 24கரட் தங்கத்திலான தங்கப்பதக்கமும் வழங்கப்படவுள்ளது.

நாட்டிலுள்ள 24 மாவட்டங்களிலும் உள்ள சகல தமிழ்மொழி மூல பாடசாலைகளிலும் பரீட்சை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன் விபரங்களை 021- 222 98 81, 075 5850508 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(6)

# தேசிய சேமிப்பு வங்கியின் கிளைகள் திறக்கப்படவுள்ளன

(காரைநகர்)

காரைநகர் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசத்தில் நாளை தேசிய சேமிப்பு வங்கியின் கிளைகள் திறக்கப்படவுள்ளன.

ஊர்காவற்றுறை பிரதான வீதியில் அமைந்துள்ள தேசிய சேமிப்பு வங்கியின் ஊர்காவற்றுறை கிளையினை காலை 8.30 மணிக்கு தேசிய சேமிப்பு வங்கியின் பொது முகாமையாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான எச்.எம். ஹென்னாயக்க பண்டார சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கவுள்ளார்.

அத்துடன் சக்கலா வோடையில் அமைந்துள்ள தேசிய சேமிப்பு வங்கி கிளையினை மதியம் 12.00 மணிக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(6-246)

# 03.07.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்


## நிகழ்வுகள்

- 987- ஹியூ காப்பெட் என்பவன் பிரான்சின் மன்னன் ஆனான்.இவனது வம்சத்தினர் 1792 இல் பிரெஞ்சுப் புரட்சி இடம்பெறும் வரை பிரான்சை ஆண்டனர்.
- 1250-பிரான்சின் ஒன்பதாம் லூயி எகிப்தில் ஏழாவது சிலுவைப் போரில் ஈடுபட்டிருந்தபோது பாய்பர்களால் பிடிபட்டான்.
- 1608-கியூபெக் நகரம் உருவாக்கப்பட்டது.
- 1754-ஏழாண்டுப் போர்:ஜோர்ஜ் வோஷிங்டனின் படைகள் நெச்சிட்டி கோட்டையை பிரெஞ்சுப் படைகளிடம் இழந்தனர்.
- 1775-அமெரிக்கப் புரட்சிப் போர்:ஜோர்ஜ் வோஷிங்டனின் மசாசுசெட்டில் இராணுவத்துக்குத் தலைமை வகித்தார்.
- 1778-அமெரிக்கப் புரட்சிப் போர்:பென்சில்வேனியாவில் பிரித்தானிய இராணுவத்தினர்,பெண்கள்,குழந்தைகள் உட்பட 360 பேரைக் கொலை செய்தனர்.
- 1778-புருசியா ஆஸ்திரியாவின் மேல் படையெடுத்தது.
- 1866-புருசியாவின் வெற்றியுடன் ஆஸ்திரிய-புருசியப் போர் முடிவுக்கு வந்தது.
- 1872-யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- 1890-ஐடஹோ ஐக்கிய அமெரிக்காவின் 43 ஆவது மாநிலமாக இணைந்தது.
- 1944-இரண்டாம் உலகப் போர்:பெலரஸ்சின் தலைநகர் மின்ஸ்க் சோவியத் படையினரால் நாசி ஜேர்மனியிடம் இருந்து விடுவிக்கப்பட்டது.
- 1962-பிரான்சுக்கு எதிரான அல்ஜீரிய விடுதலைப் போர் நிறைவு பெற்றது.
- 1969-சோவியத்தின் என்1 என்ற ஏவுகணை ஏவுதளத்திலேயே வெடித்துச் சிதறியது.
- 1970-பிரித்தானிய விமானம் ஸ்பெயினில் மலையொன்றுடன் மோதியதில் 113 பேர் கொல்லப்பட்டனர்.
- 1988-அமெரிக்க போர்க் கப்பல் பாரசிக வளைகுடா மீது பறந்த ஈரானிய பயணிகள் விமானம் ஒன்றை சுட்டு வீழ்த்தியதில் அதில் பயணம் செய்த 290 பேரும் கொல்லப்பட்டனர்.
- 2006-பூமியில் இருந்து 432,308 கி.மீ தூரத்தில் 2004Xp14 என்ற சிறுகோள் பறந்தது அவதானிக்கப்பட்டது.

## பிறப்புகள்

- 1883-பிரான்ஸ் காஃப்கா,எழுத்தாளர் (இ.1924)
- 1924-எஸ்.ஆர்.நாதன்,சிங்கப்பூர் ஜனாதிபதி.
- 1942-அடூர் கோபாலகிருஷ்ணன்,கேரளத் திரைப்பட இயக்குனர்.
- 1962-டாம் க்ரூஸ்,அமெரிக்க நடிகர்.
- 1980-ஹர்பஜன் சிங்,இந்திய கிரிக்கெட் வீரர்.

**1844-ஐஸ்லாந்தில் கடைசிச் சோடியாக இருந்த பெரிய ஓக் பறவைகள் கொல்லப்பட்டன.**



# வெங்காயத்தில் பீடைகளும் அவற்றினது முகாமைத்துவமும்



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...


11-III

### விதை வெங்காயத்தை விதை நேர்த்தி செய்தல்

இம்முறை வெங்காயச் செய்கையில் அதிகமானோர் ஈடுபட்டிருந்தும் வெங்காயப் பயிர் பல இடங்களில் அதன் வெளிப்பக்க தாள்கள் வெளிறியிருப்பதுடன் வெங்காயக் குமிழ்களும் அழுக ஆரம்பித்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. பல விவசாயிகள் நாள் தோறும் வெங்காயம் வெளிறுவதைக் கண்ணுற்று முகஞ் சுளிக்கத் தொடங்கிவிட்டனர். இன்னொரு பக்கத்தில் வெளிறியிருக்கும் வெங்காயப் பயிரை பிடுங்கி வெளியிலெறிந்து கொண்டிருக்கின்றனர். பெயரளவில் என்னவோ "வேதாளம்" என்றாலும் விரைந்து அழுகி தாள்கள் தொடர்ச்சியாக வெளிறிக் கொண்டிருக்கின்றன.

தற்போதைய காலநிலை வேதாளம் இன வெங்காயத்திற்கு பிரச்சனையாகி இருப்பதை அறிய முடிகிறது. குமிழ் அழுகலிலிருந்து வெங்காயத்தை விரைந்து காப்பாற்ற முடியாது. விஞ்ஞான உலகமும் திணறிக் கொண்டிருக்கின்றது. ஒரு சில இடங்களில் பூச்சி நாசினியாகவும் விலாங்குப் புழு நாசினியாகவும் தொழிற்படும் பியூரடான் அல்லது காபோபியூரான் என்னும் குருணல் முழுமையான பலனைத் தரவில்லை. பிரயோகித்த ஓரிரு நாட்களுக்கு தாள் வெளிறும் தன்மை குறைவாக இருப்பினும் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதை போல வெங்காயத் தாள் வெளிறல் பரவிக்கொண்டிருக்கின்றது. இந்த இடத்திலே இதற்கு முதலிலே குறிப்பிட்டுக் கூறிய படி நீர்பாய்ச்சும் அளவை மட்டுப் படுத்த வேண்டும்.

நிலத்தில் ஈரப்பதன் எல்லை மீறி அதிகமாக இருந்தால் பாதிக்கப்பட்ட குமிழ்களும் வேர்களும் தொடர்ந்து அழுக ஆரம்பித்து விடும். விலாங்குப் புழுவின் தாக்கத்தினால் ஏற்கனவே நொய்ந்து போய் வெங்காயக் குமிழ்களும் வேர்களுமாக நலிவுற்றிருக்கும் போது 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல' நீரை அதிகளவில் பாய்ச்சி வெங்காய குமிழ்கள் மேலும் அழுகுவதற்கு நாம் உதவி செய்ததாக ஆகிவிடக் கூடாது.



தலைக்கு மேல் வெள்ளம் வந்த பின் நிவாரணம் தேடியோடி எதுவிதமான பயனும் இல்லை. மேலும் தேவையற்று விசிறப்படும் எந்தப் பீடை நாசினியும் தீமையை ஏற்படுத்துமே தவிர நன்மையெதையும் தரப் போவதில்லை. ஒரு பக்கம் வெங்காயப் பயிரெல்லாம் இப்படி ஆகிவிட்டதே என்ற ஆதங்கத்தில் கையிலகப்பட்ட இரசாயனங்கள் எதனையும் விசிற முற்படாதீர்கள். விளைவு இருப்பதை விட பாரதூரமானதாகி விடும்.



வெளிறல் ஓரளவிற்கு கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் போது, கண்டதை விசிறி சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தது போலாகி விடும். எதற்கும் வரும் முன் அணைகட்டுவதே சிறந்தது. இந்த விடயத்தில் விவசாய விஞ்ஞானிகளினது கருத்திற்கோ அல்லது விரிவாக்க உத்தியோகத்தரினது ஆலோசனைக்கோ முன்னுரிமை கொடுப்பது நல்லது. இது எங்களது வீடுகளில் இருக்கும் முதியவர்களின் ஆலோசனைக்கும் அறிவுரைக்கும் ஒப்பானது. அனுபவத்திற்கு அவ்வளவு மதிப்பு. ஆலோசனைகள் என பலவாறாக பத்திரிகைகள் வாயிலாக பலரும் எழுதிய போதும் விதை வெங்காயம் நடவுசெய்யும் காலத்தில் விதை நேர்த்தி பற்றி எவருமே ஆலோசனை கூறுவதில்லை. ஆனால் பிரச்சினை என்று பெரிதாக வந்தவுடன் விரிவாக்க உத்தியோகத்தரையோ வேறொருவரையுமோ அணுகி விரைந்து கட்டுப்படுத்த முடியாது. இதுபற்றிய முழு விளக்கமுமே விவசாயி ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படல் வேண்டும்.

விவசாயப் பெருமக்களின் விருப்புக்கிணங்க விதை வெங்காய நேர்த்தி பற்றிய விரிவான விளக்கத்தை பார்ப்போம்.

*விதை வெங்காயத்தில் பாதிப்பு ஏற்படாவண்ணமும் அதன்மூலம் விலாங்குப் புழுவோ,பூஞ்சணங்களோ பரவிவிடக் கூடாது என்பதற்காகவும் எவ்விதத்திலும் அது நோய்க் காரணிகளுக்கான காவியாக தொழிற்படுவதைத் தடுப்பதற்காகவுமே விதை நேர்த்தி அவசியமாகின்றது. ஆரம்ப அத்தி வாரம் சிறப்பாக தப்பிதமேதுமின்றி இருப் பதற்கான முன்னோடி முயற்சிகளில் ஒன்றாகவே விதை நேர்த்தி செய்யப்படுகின்றது. விதை வெங் காயத்தின் முளைத்தலுக்கு முன்பும்; அதன் பின்னரான வளர்ச்சியிலும் வெங்காயத் தினூடு காவிச் செல்லப்படும் நோய்க்காரணி களால் வெங்காயக் குமிழ்கள் சேதப்படுவதற் கான வாய்ப்புக்கள் அதிகம் இருக்கிறது.*

இது வேலியே பயிரை மேய்ந்த கதை போலாகும். ஆதலினால் நட்ட விதை நல்ல விதையாக இருக்கவேண்டும். அதில் தொற்றிவிடக் கூடிய விலாங்குப் புழு மற்றும் பூஞ்சணம் போன்றவை விதையுடன் எடுத்துச் செல்லப்பட்டு நடுகை செய்யப்படல் ஆகாது. இதற்காகவே விதை வெங்காயத்திற்கு விதை நேர்த்தி அவசியமானதாகும்.

பூஞ்சண நாசினியால் விதை நேர்த்தி செய்தல்.

**விதை நேர்த்தி செய்வதன் அவசியம் என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.**

விவசாயத் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பூஞ்சண நாசினிகளால் விதைநேர்த்தி செய்வது நல்லது. விதை நேர்த்தி செய்வதற்காக பல பூஞ்சண பங்கசு என்றும் பலரும் பலவிதமாகப் பயன்படுத்தினாலும் இரண்டும் ஒன்றையே குறித்து நிற்கின்றன என்பதனை கவனத்திற் கொள்ள வேண்டும்.

பூஞ்சண நாசிகளால் விதை நேர்த்தி செய்யும் போது வெங்காயக் குமிழ்களை நடுகை செய்து அது முளைத்து வளரும் வரை வெங்காயக் குமிழை தாக்கும் எந்த வகையான பூஞ்சணங்களையும் கட்டுப் படுத்த முடியும். அதனால் மண்ணினுள் இருந்து சாதகமான சூழ்நிலையேற்படும் போது விரைந்து நோயேற்படுத்தி விடுகின்றன.

**விதை வெங்காய நேர்த்திக்காக பரிந்துரைக்கப்பட்ட பூஞ்சண நாசினிகள்**

1.றொப்சின் 70% (தியோபனேற் மீதைல் 70%)

2.போமசால் போட்டே 80% (திராம் 80%)

3.வேஹாமாய் (தியோபனேற் மீதைல் 50% + திராம் 30%)

விதை வெங்காயத்தை மேற்படி பூஞ்சணக் கரைசலில் 30 நிமிடங்கள் வரை அமிழ்த்தி ஊறவிட்டபின் அதனை வெளியிலெடுத்து நிழலில் உலரவிட்டு மறுநாள் நடுகை செய்யலாம். மேற்படி பூஞ்சண நாசினிகளின் பரிகரிப்பு நோய் வருமுன் காக்கும் செயன்முறையின் ஒரு வடிவமே. இப் பூஞ்சண நாசிகள கொலற்றோரைகம் மற்றும் பியூசேரியம் ஆகிய பூஞ்சணங்களின் தொற்றுதலை கட்டுப்படுத்தும் திறனுடையதால் இப்பூஞ்சணங்களால் ஏற்படுத்தப்படும் குமிழ் அழுகல் மற்றும் வெங்காய தாள் சுருளல் நோய்களைக் கட்டுப்படுத்த பெரிதும் உதவும் என்று கூறலாம். (தொடரும்)

# வடபகுதி மக்கள் 500 பேருக்கு இலவச கண் சத்திர சிகிச்சை

## நடிகர் சல்மான்கான் நிதியுதவி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மற்றும் வவுனியா நிவாரணக் கிராமங்களில் இருக்கும் கண்ணில் விழிவெண்படலம் படர்ந்துள்ள 500 பேருக்கு தமது சொந்த செலவில் கண் சத்திர சிகிச்சை செய்வதற்கு இந்தியாவின் முன்னணி பொலிவூட் நடிகர் சல்மான்கான் முன் வந்துள்ளார்.

இது விடயமாக நடிகர் சல்மான்கான் சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேனவுடன் தொலைபேசி மூலம் கலந்துரை யாடி தமது விருப்பத்தைத் தெரிவித்தார்.

இத் திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கிய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்கேற்ப இந்தியாவின் ஐந்து கண் சத்திரசிகிச்சை நிபுணர்கள் இலங்கை வரவுள்ளனர்.

இச் சிகிச்சைக்குத் தேவையான உபகரணங்களும் மருந்துப் பொருட்களும் அடுத்து வரும் இரண்டு, மூன்று தினங்களில் இலங்கைக்குக் கொண்டு வரப்படவுள்ளன.

இக் கண் சத்திரசிகிச்சை கொழும்பு கண் மருத்துவமனையில் நடைபெறும். அதே நேரம் கண்நோயாளர்களுக்குப் பாவிக்கவென ஒரு தொகை கண் வில்லைகளை வழங்கவும் நடிகர் சல்மான்கான் விருப்பம் தெரிவித்துள்ளார். (6)

# நிபுணர்குழு தொடர்பில் இலங்கையின் நிலைப்பாடு மிகவும் சரியானதே

## சீனா தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு தொடர்பில் இலங்கை அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாடு மிகவும் சரியானதென சீனா அறிவித்துள்ளது.

யுத்தக் குற்றச்செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உள்நாட்டு ரீதியான விசாரணைகளை நடத்த இடமளிக்கப்பட வேண்டும் எனவும், அதற்கான தகுதி இலங்கையிடம் காணப்படுவதாகவும் சீனா சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் உள்விவகார சூழ்நிலையை ஸ்திரப்படுத்த ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் சர்வதேச நாடுகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென சீனா குறிப்பிட்டுள் ளது.

இலங்கை அரசாங்கமும், அதன் மக்களும் உள்விவகாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய இயலுமையைக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு,

யுத்தக் குற்றச்செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவொன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்கனவே நியமித்துள்ளதாக சீன வெளிவிகார அமைச்சின் பேச்சாளர் குன் காங் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய புறச்சூழலை ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான்கீ மூன் உள்ளிட்ட சர்வதேச சமூகம் உருவாக்க வேண்டுமென சீனா வலியுறுத்தியுள்ளது. (6)

# தமிழ் மந்திரங்களே திருமுறைகள் 6

## சிவத்தமிழ் அன்னையின் நினைவுப் பேருரை



'ஓம்', 'ஹ்ரீம்' என்ற இரு ஆதிமந்திரங்களின் சேர்க்கையும் வெளிப்பாடுமே அகிலாண்ட கோடிகள் அனைத்துமாவன. படைத்தல்,காத்தல்,அழித்தல் அனைத்துமே இந்த இரு மந்திரங்களில் இருந்து வந்தவையே. இதை மேலும் விளக்குவதனால் படைத்தலுக்கு முன்னர் எங்கும் வியாபித்து இயக்கமின்றி நிற்கும் ஸ்தம்பித்த நிலை சிவ நிலை.

அதுவே ''ஓம்'' என்ற நிலை. படைத்தலுக்குப் பின்னர் வெகுவாக முன்னணியில் நிற்கும் நிலை சக்தி நிலை அல்லது ''ஹ்ரீம்'' என்ற நிலை பிரளயத்தின் பின்னர் மீண்டும் ''ஓம்'' என்ற சிவ நிலை உருவாகின்றது.

ஆகவே ''ஓம்'' என்ற அத்திவாரத்தில் இருந்து தான் ''ஹ்ரீம்'' என்ற படைக்கப்பட்ட இந்தப் பிரமாண்டமான அண்டசராசரங்கள் அனைத்தும் மேலெடுக்கப்பட்டுள்ளன. இதனால் தான் மந்திரங்கள் யாவும் பொதுவாக ''ஓம்'' என்ற ஒலியுடன் தொடக்கப்படுகின்றன.

திருமந்திரத்தில் ஓங்காரத்தின் மாண்பு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஓமெனும் ஓங்காரத்துள்ளே யொருமொழி**
**ஓமெனும் ஓங்காரத்துள்ளே உருஅரு**
**ஓமெனும் ஓங்காரத்துள்ளே பலபேதம்**
**ஓமெனும் ஓங்காரம் ஒண் முக்திசித்தியே**

அதாவது ஓமெனும் ஓங்காரத்துள்ளே யொருமொழி என்பதை எடுத்துக்கொண்டோமானால் ஓம் என்ற ஓங்காரம் ஓர் எழுத்து மந்திரம். இது தூய தமிழ்ச்சொல். இது ஈர் எழுத்துக்களால் ஆனது அன்று. இது ஓர் எழுத்து மொழியாகும். ஓம் என்னும் சொல் ஓம்புதல் என்பதன் முதல் நிலைத்தொழிற் பெயர். அதன் பொருள் காத்தல் என்பது. ஓம் என்பதே சொற்களுள் அதி உன்னத சொல் என்பது இதன் விளக்கம். அடுத்து ஓமெனும் ஓங்காரத்துள்ளே உரு அரு. இந்த ஓம் என்ற ஓங்காரத்துள்ளே தான் உருவங்கள் அனைத்தும் அருவங்கள் அனைத்தும் அடங்கியுள்ளது என்கின்றார் திருமூலர்.

மூன்றாவது வரியில் ஓமெனும் ஓங்காரத்துள்ளே பலபேதம் என்கின்றார். அதாவது இந்தப் பிரபஞ்சத்தின் உள்ளே இருக்கும் சகல பேதங்களும் இந்த ஓம் என்ற சொல்லினுள் அடங்கியுள்ளது என்று கூறுகின்றார்.

சங்கராச்சாரியாரின் குருவின் குரு கௌடபாதர் கூறினார் உண்மை என்பது தன்னை நிலைநிறுத்தி அதே நேரம் ஆயிரம் பேதங்களையும் அதனுள்ளேயே அடக்கி வைத்திருக்கும் சக்தி வாய்ந்தது என்று. நம் என்பது தான் உண்மை. சத்தியம்; அதனுள் சகலபேதங்களும் அடங்குவன என்கின்றார் திருமூலர்.

அது மட்டுமல்ல ஓமென்னும் ஓங்காரம் ஒண் முக்தி சித்தியே என்று கடைசி வரியில் கூறுகின்றார். அந்த ஓங்காரமே பிரகாசம் மிகுந்த சித்திகளையும் முக்தி நிலையையுந் தரவல்லது என்கின்றார்.

2677 ஆம் இலக்கம் கொண்ட அடுத்த திருமந்திரத்தில் பின்வருமாறு கூறுகின்றார்.

***ஓங்காரத்துள்ளே உதித்த ஐம்பூதங்கள்***
***ஓங்காரத்துள்ளே உதித்த சராசரம்***
***ஓங்கார தீதத்துயிர் மூன்றும் உற்றன***
***ஓங்கார சிவ பரசிவரூபமே.***

''*ஓங்காரத்துள்ளே உதித்த ஐம் பூதங்கள்*'' என்றால் மண், நீர்,தீ,காற்று, ஆகாயம் என்ற ஐம்பூதங்களும் ஓங்காரத் தில் இருந்துதான் வெளிவருகின்றன. அதாவது இயற்கையாகவே நிலைபெற்றிருக்கும் ஐம்பூதங்களும் ஓங்காரத்தினுள் அடக்கம் என்கின்றார் திருமூலர்.

" *ஓங்காரத்துள்ளே உதித்த சராசரம்*" என்றால் அசையும் அசையாப் பொருட்கள் அனைத்துமே அந்த ஓங்காரத்தில் இருந்து தான் வெளிவந்துள்ளன. சரம் –அசரம் சராசரம். அதாவது சரம் என்றால் அசையும் பொருட்கள் .அசரம் என்றால் அசையாப் பொருட்கள்.

அடுத்த வரியில் " *ஓங்கார தீதத்துயிர் மூன்றும் உற்றன*" என்கின்றார். அதாவது எல்லை கடந்த ஓங்கார அதீதத்தில் மூன்று விதமான உயிர்களும் பொருத்தி உள்ளன என்கிறார்.மூன்று விதமான உயிர்கள் என்றால் சைவ சித்தாந்தத்தின்படி ஒன்று ஆணவமலம் மட்டும் இயைந்த ஆன்மா. அடுத்தது ஆணவம் , கன்மம் என்னும் இரு மலங்களையும் உடைய ஆன்மா. மூன்றாவது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும் மலங்களையுடைய ஆன்மா. இந்த மூன்று விதமான மாசுக்களை அல்லது மலங்களைக் கொண்ட உயிர்கள் கூட ஓங்காரத்திலேயே பொருந்தி உள்ளன என்கின்றார். கடைசி வரியில் '' *ஓங்கார சீவ பரசிவ ரூபமே*'' என்றார். அந்த ஓங்காரம் தான் சிவரூபம் அல்லது ஆருயிர் ரூபம். அந்த ஓங்காரம் தான் அருளுடைய இறை வடிவமும் கூட என்று கூறுகின்றார்.

இவற்றில் இருந்து நாம் காண்பது என்னவென்றால் பிரபஞ்சம் அனைத்தும் ஓம் என்ற சொல்லினுள் அடக்கம் என்பதையே. இதையே பைபிளில்

"In the begining was the world
the word was with God
the word was God "

என்று பரியோவானின் நற்செய்தியில் குறிப்பிடுகின்றார்.

**ஆதியில் இருந்தது ஒரு மொழி**
**அது இறைவனுடன் இருந்தது**
**அதுவே இறைவனாக இருந்தது**

என்கின்றார்.

இந்தப் பிரபஞ்சம் அந்த ஆதி மொழியாம் ஓங்காரத்தில் இருந்தே பிறந்துள் ளது. அதுவே பிரபஞ்சத்தில் உள்ள சகலத் தினதும் உயிர்நாடியாய் அமைந்துள்ளது. இதனை மேலும் உங்களுக்கு விளக்குவதா னால் ஒரு நகரத்து வீதியில் இரவில் பல விதமான வெளிச்சங்கள் காணப்படுகின்றன ;கேளிக் கைகள், நடனங்கள், நடமாட்டங்கள் நடந் தேறுகின்றன.

**ஓய்வுபெற்ற நீதியரசர்**
**சி.வி.விக்னேஸ்வரன்**

மின்சாரம் திடீரென்று தடைப்பட்டால் எல்லாமே அடங்கிவிடும்.அத்தனை கேளிக் கைகளுக்கும், நடனங்களுக்கும், வெளிச் சங்களுக்கும், நடமாட்டங்களுக்கும் ஆதி மூலமாக இருந்தது மின்சாரமே. மின்சாரம் வேலை செய்ததால்தான் வெளிச்சங்கள்தெரிந் தன. மற்றவை யாவும் நடைபெற்றன. அதேபோல்தான் இந்த ஓங்காரம், அதன் அசைவிலேயே அண்ட சராசரங்களும் ஒரு ஒழுக்கத்திற்கமைய ஓடிக்கொண்டிருக்கின் றன. 'ஆ' என்றால் வாயை திறப்பது. 'உ' என்றால் தொடர்ந்து ஒலியை வைத்திருப் பது. 'ம்' என்றால்வாயைமூடுவது. 'ஆ' என்று வாய் திறந்து 'ம்' என்று வாய்மூடும் காலகட்டத்தினுள்ளே தான் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியன நடைபெறுகின்றன. நடப்பது யாவும் அந்த ஓம்காரத்தின் உள்ளேயே நடைபெறுகின்றது. (தொடரும்)

## மாகாண சபைகளுக்கு போதியளவு அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்

### ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாணசபைகளுக்கு போதியளவு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளுக்கான சலுகைகளை வழங்கும் விவகாரத்தில் அரசாங்கம் மாற்றான் தாய் கொள்கையையே கடைப்பிடித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிதி, வெளிவிவகாரம், பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய விடயங்களைத் தவிர ஏனைய அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளதோடு குறிப்பாக வரி அறவீடு செய்வதற்கான அதிகாரத்தை மாகாணங்களுக்கு வழங்க வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

ஐக்கிய இலங்கைக்குள் மாகாணசபைகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை மட்டுமே அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்துள்ளார்.



மாகாண சபைகளுக்கு வரி அறவீடு செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டால் மாகாணங்களுக்கு இடையில் ஆரோக்கியமான போட்டி உருவாகும் எனவும் இதனால் அபிவிருத்தி இலக்குகளை எட்ட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசாங்கத்தினால் தற்போது மாகாணசபைகளுக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீடுகள், சம்பளக் கொடுப்பனவுகளுக்கே போதுமானதாக இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6)

## மூன்று மாதங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 170 பேர் பலி

(கொழும்பு)

முதல் மூன்று மாதங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 170 பேர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு ஜனவரி தொடக்கம் மார்ச் மாதம் வரையில் 8 ஆயிரத்து 502 வாகன விபத்து சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரசி கருணாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க பாராளுமன்றில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் அரசாங்க தரப்பினர் இதனைத் தெரிவித்தனர்.

கடந்த வருடம் 33 ஆயிரத்து 721 வீதி விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இது கடந்த ஆண்டை விடவும் அதிகமாகும் எனவும் தெரிவித்துள்ளனர். முதல் மூன்று மாதங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் 887 விபத்துக்கள் அதிகவேகமாக வாகனத்தை செலுத்தியதனாலும் 260 விபத்துக்கள் குடி போதையில் வாகனத்தை செலுத்தியதனாலும் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (6)

## தென்கிழக்குப் பல்கலைக்கு புதிய மாணவர்கள் அனுமதி

(கொழும்பு)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு 2009/2010 கல்வியாண்டுக்கு 449 மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளப் பல்கலைக் கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது

111 மாணவர்கள் பௌதீக விஞ்ஞானக் கற்கை நெறிக்காகவும், 89 மாணவர்கள் உயிரியல் விஞ்ஞானக் கற்கை நெறிக்கும் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இவர்கள் இம்மாதம் 15 ஆம்திகதிக்கு முன்னர் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தம்மைப் பதிவுசெய்ய வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரேபிய மொழிக் கற்கை நெறிக்காக 70 மாணவரும் இஸ்லாமியக் கற்கை நெறிக்காக 98 மாணவரும், முகாமைத்துவத் தகவல் தொழில்நுட்பக் கற்கை நெறிக்காக 81 மாணவரும் , முகாமைத்துவத் தகவல் தொழில்நுட்பக் கற்கை நெறிக்காக 81 மாணவரும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதுடன் இவர்கள் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் தம்மைப் பதிவு செய்ய வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

## அரச வாகனங்களை இனங்காணும் வகையில் புதிய செயற்றிட்டம்

(கொழும்பு)

புதிதாகப் பதிவு செய்யப்படும் அரச வாகனங்களின் எழுத்துக்களையும் இலக்கங்களையும் நீல வர்ணத்தில் பொறிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களம் குறிப்பிடப்படுகிறது.

இந்தப் புதிய வேலைத்திட்டம் கடந்த மாதம் 30 ஆம்திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன ஆணையாளர் லலித் தர்மப்பிரிய தெரிவித்துள்ளார்.

அரச வாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தலைத் தடுப்பதற்கும் அவற்றை இலகுவில் இனங்காண்பதற்கும் இந்தப் புதிய ஒழுங்கைக் கடைப்பிடிக்குமாறு, கடந்த காலங்களில் மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களத்திற்கு அரசாங்கம் ஆலோசனை வழங்கியிருந்தது.

இந்த ஆலோசனைக்கமைய புதிய செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (6)

# மாணவர் கல்வி மேம்பட 5

ஆசிரியர்களே, மாணவர்கள் புரிந்துணர்வு மூலம்தான் வளமான கல்வியைப் பெறமுடியும். மேற்குலகக் கல்விச் சிந்தனையாளர்களில் ஒருவரான Mark Van Doren என்னும் அமெரிக்கர் இவ்வாறு கூறுகின்றார். The powers of the person are what education wishes to perfect.I believe we need to teach our students how to use their knowledge, their power. We certainly need citizens who are empowered to think critically and make moral decisions. we also need citizens to gain power by thier employment. I believe that all pur suits of knowledge are important to the growth of the individual,but I also believe that we need to show students how to apply their knowledge to enhance their employable skills. Students need employable skills and society needs skilled workers.

''கல்வி மக்களின் சக்திகளை நிறைவாக்க விளைகிறது. எங்கள் மாணவர்களுக்கு அவர்கள் அறிவை எவ்வாறு பயன்படுத்துவது, அவர் தம் ஆற்றலை எவ்வாறு உபயோகிப்பது என்பதைக் கற்றுக்கொடுக்க வேண்டும். நிச்சயமாக எங்களுக்கு ஆக்க பூர்வமாக, ஆய்வு செய்து நீதி நியாயம் கொண்ட தீர்வுகளை எடுக்கக்கூடிய நல்ல அறிஞர்கள் வேண்டும்.அதேபோல் தங்கள் தொழில்மூலம் சக்தி ஈட்டக்கூடிய மக்களும் எமக்கு வேண்டும்.எல்லாவிதமான கல்வி முயற்சிகளும் ஒரு தனி மனிதனின் வளர்ச்சிக்கு அவசியம் என்பது என் நம்பிக்கை. ஆனால் அதே சமயம் எங்கள் மாணவர்களுக்கு அவர்கள் பெற்ற அறிவை உபயோகித்து தங்கள் தொழில் திறமைகளை அதிகரிக்கலாம் என்பதைக் காட்ட வேண்டிய அவசியமும் எமக்கு உண்டு. மாணவர்கட்கு தொழிலில் பயன்படுத்தக் கூடிய திறமைகள் அவசியம். சமுதாயத்திற்குத் திறமை உள்ள உழைப்பாளிகள் அவசியம்.

இந்த வகையில் எதிர்காலப் புதுப் பிரச்சினைகளை ஆயத்தம் செய்யும் சமூகத்தின் கர்த்தாக்களே ஆசிரியர். ஆசிரியர்கள் அந்த சமூகத்தின் உட்செல்லும் வழியை மாணவர்கள் காண்பதற்கு உதவும் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறார்கள்.

ஆக்கி உபயோகிங்கள்.

✦ வகுப்பிற்கு நேரம் முந்தி வந்து காலம் தாழ்த்தி இருந்து மாணவர்களுடன் உரையாடுங்கள்.

✦ உங்கள் பாடக்கொள்கைகளை நன்கு விளக்குங்கள்.

✦ ஒன்றிணைந்து செயற்படுங்கள்.

✦ மாணவர்களது குறிப்புக்கள், வினாக்கள் ஆகியவற்றைப் பாராட்டுங்கள்.

✦ கற்பித்தலில் உற்சாகமும், உங்கள் பாடத்தில் ஆர்வமும் கொண்டிருங்கள்.

✦ நகைச்சுவை உணர்வை இடையிடையே கொள்வதன் மூலம் கற்பதை கேட்டு விளங்கிக் கொள்ளவேண்டும்.

✦ அன்று படிக்கும் பாடங்களை அன்றே வீட்டில் மீண்டும் படிக்க வேண்டும்.

✦ நேரசூசியின் படி படிக்கவேண்டும்.

✦ படிக்கும் நேரங்களில் கவனத்தைத் திசை திருப்பாது படிக்கவேண்டும்.

✦ தேவையற்ற வீணான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதைத்தவிர்த்தல்.

✦ கையடக்கத் தொலைபேசியை கூடிய வரை தவிர்த்தல்.

✦ படிக்கும் பாடங்களை சிறு குறிப்பெழுதிப் படிக்க வேண்டும்.

✦ கடந்த கால வினாப்பத்திரங்களைச் செய்து பார்த்தல் வேண்டும்.

✦ எந்நேரத்திலும் பரீட்சைக்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

✦ பரீட்சையில் உரிய வினாக்களைக் குறித்த நேரத்தில் செய்ய வேண்டும்.

✦ தூக்கக் கலக்கத்தில் படிக்காதீர்கள்.

## ஆசிரியர்,பெற்றோர், மாணவரிடையே ஒத்துணர்வு

ஒருநாட்டில், ஒரு சமூகத்தில் எவ் வகையிலும் கல்வி மிக முக்கியமான ஒன்று. இந்தக் கல்வியை வழங்கும் ஆசிரியர்கள் பணி போற்றப்பட வேண்டிய ஒன்று. நல்ல கல்வியை மாணவர்கள் பெறவும், அதை நல்ல முறையில் ஆசிரியர்கள் அவர்களுக்கு வழங்கவும், இருவரிடையேயும் ஒத்துணர்வு, நல்விளக்கம் ஏற்பட பின்வரும் குறிப்புக்களை ஆசிரியர்கள் பின்பற்றி இரு சாராரிடையேயும் நல் விளக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தலாம். (Tips for Rapport Building)

✦ ஒவ்வொரு மாணவனையும் பெயர் சொல்லி அழையுங்கள்.

✦ உங்கள் மாணவர்களின் அபிலாஷைகள், பொழுது போக்குகள், ஆக்கங்கள் என்பன பற்றி அறிந்துகொள்ளுங்கள்.

✦ பொருத்தமான உதாரணங்களை இலகுவாக்குங்கள்.

✦ பணிவுடனும், தேவை ஏற்படின் நீங்கள் தாழ்மையுள்ளவராகவும் இருங்கள்.

✦ மாணவர்களை அன்போடும், கனிவோடும், பாசத்தோடும் பாருங்கள்.

✦ மாணவர்களைப் பண்புடன் நடத்துங்கள்.

✦ புன் சிரிப்பை மறக்கவேண்டாம்.

மாணவர் கல்வி கற்பதன் மூலம் பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் பெற்று, நல்ல பதவியில் இருக்கவேண்டும் என்ற இலட்சியத்தோடு கற்றால் வாழ்வில் வெற்றி பெறலாம். அதற்கு மாணவர்கள் செய்ய வேண்டியது.

✦ கற்கும் போது ஆசிரியர் கற்பிப்பதை அவதானமாகக் கேட்டுக் கற்கவேண்டும்.

✦ படிப்பது விளங்காவிடின் மீண்டும் அதில் எவ்வித பயனும் இல்லை.

✦ அதிகாலையில் விழித்தெழுந்து படியுங்கள். பூரண பயன் உண்டு.

✦ ஏனைய தேவைகளை விட படிப்புக்கு அதிக நேரம் செலவிடுங்கள்.

வைத்திய நிபுணர்
த.பேரானந்தராசா
MBBS MD(Medicine)
யாழ்.போதனா வைத்தியசாலை

இவற்றைக் கடைப்பிடித்தால் வாழ்வில் நிச்சயம் வெற்றிபெறலாம் என்று கூறிக் கொண்டு ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எல்லோரையும் கொண்ட சமூகம் உயர்வு பெறுக என மனதார வாழ்த்தி அமர்கிறேன். (முற்றும்)

# ஜி.எஸ்.பி.வரிச்சலுகை இடைநிறுத்தப்பட்டால்

# அதனை இலங்கை வெற்றிகரமாக எதிர்கொள்ளும்

## மத்திய வங்கி அறிக்கை

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் ஏற்றுமதி வரிச்சலுகையான ஜி.எஸ்.பி.பிளஸ் நிறுத்தப்பட்டாலும் கூட இலங்கையின் ஏற்றுமதித்துறை அந்தச் சவாலை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் எனவும் தன்னை மேலும் பலப்படுத்திக் கொள்ளும் என்றும் இலங்கை மத்திய வங்கி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை மத்திய வங்கி நேற்றுமுன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இவ் வருடம் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதியுடன் இந்த ஏற்றுமதி வரிச்சலுகை நிறுத்தப்படக்கூடும் என்ற அனுமானங்களுக்கு பதில் சொல்லும் வகையிலேயே இலங்கை மத்திய வங்கி இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை இலங்கையால் ஏற்றுமதி செய்யப்பட்ட ஆயத்த ஆடைகளில் 50 வீதமானவை மாத்திரமே ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும், அப்படி ஏற்றுமதி செய்யப்பட்டவற்றில் 60 வீதமானவை மாத்திரமே ஜி.எஸ்.பி.வரிச்சலுகையை பெற்றதாகவும், ஒட்டுமொத்தமாக 78 மில்லியன் யூரோக்கள் மாத்திரமே இலங்கை க்கு ஜி.எச்.பி.வரிச்சலுகையால் கிடைத்த பலன் என்றும் மத்திய வங்கி கூறியுள்ளது.

இந்த வரிச்சலுகை ஐரோப்பிய ஒன்றிய தரப்பில் மாத்திரம் வழங்கப்படும் ஒரு தலைப்பட்ச வரிச்சலுகை என்பதுடன் அது பரஸ்பர நன்மை அல்ல என்பதாலும், அது எந்த நேரத்திலும் நிறுத்தப்படலாம் என்ற ஆபத்தை தாம் கடந்த காலங்களில் ஏற்றுமதியாளர்களுக்கு வலியுறுத்தி வந்ததாகவும் மத்திய வங்கி கூறியுள்ளது.

ஆகவே அதற்கமைய பல முன்னேற்பாட்டு நடவடிக்கைகளையும் ஏற்றுமதியாளர்களுக்கு தாம் பரிந்துரைத்திருந்ததாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

அதற்கமைய, இலங்கை அரசாங்கமும், மத்திய வங்கியும் முக்கிய ஏற்றுமதியாளர்களும் வணிகச் சூழ்நிலையையும் நம்பகத்தன்மையையும் மேம்படுத்தல், பொருளாதார அடிப்படைகளை ஸ்திரப்படுத்தல்,சர்வதேச முதலீட்டையும், கடன் சந்தையையும் கவர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல், நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தல், போர் அச்சுறுத்தலற்ற நாடாக இலங்கையை மாற்றுதல் போன்றவை உட்பட பல முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் இந்த நடவடிக்கைகளின் காரணமாக, இந்த ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை நிறுத்தத்தால் ஏற்படக்கூடிய சவால்களை இலங்கை ஏற்றுமதித்துறை இலகுவாக எதிர்கொள்ளும் நிலையை எட்டியுள்ளது என்றும் மத்திய வங்கி தனது அறிக்கையில் கூறியுள்ளது. (6)

## சஹஜயோகா தியான வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். சைவபரிபாலன சபையினால் நடத்தப்படும் சஹஜயோகா தியான வகுப்புக்கள் நாளை ஞாயிற்றுக்கிழமையும் எதிர்வரும் 10,17,26,27 ஆகிய திகதிகளிலும் நடைபெறவுள்ளதாக பரீட்சைச் செயலர் இரா.செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (4)

## நாட் பாடசாலை வகுப்புக்கள்


(யாழ்ப்பாணம்)

பட்டப்பின் கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கான மீட்டல் நாட்பாடசாலைகள் தொடரில் இன்று கல்வி முகாமைத்துவம் / கலைத்திட்டம் மற்றும் அளவீடும் மதிப்பீடும் ஆகிய பாடங்களும் நாளை சிறுவர் உரிமைகள் மற்றும் கல்வித்தொழிநுட்பம் ஆகிய பாடங்களும் நடைபெறும். இந்நாட் பாடசாலைகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என யாழ்.திறந்த பல்கலைக்கழக இணைப்பாளர் அறிவித்துள்ளார். (சு)

# வருடாந்த வருமானத்தை விடவும்

# 108 மடங்கு கடனை பெற்றுள்ளது அரசு

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

2010 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் பெரும் பகுதி ராஜபக்ஷ குடும்பத்தாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட மொத்த செலவுகளில் அறுபது வீதம் இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

வருடாந்த வருமானத்தை விடவும் 108 மடங்கு பணத்தை அரசாங்கம் கடனாகப் பெற்றுக்கொண்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், அரசாங்கத்தின் நடைமுறைச் செலவுகளை ஈடுசெய்யும் நோக்கில் இந்தக் கடன் பெற்றுக்கொள்ளபட்டுள்ளதென குறிப்பிட்டுள்ளதோடு, பாரியளவு கடன் சுமையுடைய நாடொன்று எவ்வாறு அபிவிருத்திப் பாதை நோக்கிப் பயணிக்கும் என கேள்வி எழுப்பியுள்ளார்.

வரவு செலவுத்திட்டம் என்பது நாட்டின் பொருளாதார, சமூக, அபிவிருத்தி தொடர்பான ஓர் ஆவணம் என்றபோதிலும்,2010 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் அவ்வாறான அம்சங்களை காணமுடியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடனை எவ்வாறு மீளச் செலுத்துவது என்பது தொடர்பான திட்டமற்ற முதலாவது வரவு செலவுத்திட்டமாக இதனைக் கருத வேண்டுமெனவும் வரி அறவீடு செய்வதனைத் தவிர அரசாங்கத்திற்கு வேறு வழியில்லை எனவும்,எதிர்வரும் மாதங்களில் பொதுமக்கள் மேலும் நெருக்கடி நிலைக்கு தள்ளப்படுவர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளதோடு உலக சந்தையின் விலை மாற்றத்திற்கு ஏற்ப எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும், எரி பொருளுக்கான விலை குறைக்கப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ளார். (6)

# இலங்கை அகதி மாணவர்களின் கல்வி தொடர்பில் சாதக முடிவு எட்டப்படுமா ?

(கொழும்பு)

தமிழக பாடசாலைகளில் படித்த இலங்கை அகதி மாணவர்களை பொதுப்பட்டியலில் தரவரிசையின் அடிப்படையில் பொறியியல் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளலாம் என தமிழக அரசு கூறியுள்ளது.

இந்த உத்தரவு குறித்து முதல்வர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இந்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அண்மைக் காலமாக தமிழக பாடசாலைகளில் பயிலும் அகதி மாணவர்கள் பொறியியல் உள்ளிட்ட தொழில் முறை பட்டப்படிப்புகளில் சேர்ந்து படிக்க முடியாத நிலை இருந்து வருகிறது.

இலங்கை மாணவர்கள் பலர் அதிகமதிப்பெண் பெற்றிருந்தும் அவர்களுக்கு உயர்கல்வி பயில கல்லூரி யில் இடம் கிடைக்குமா என்பது தெளிவில்லாமல் இருப்பதாக பல பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளில் தமிழக மாணவர்களைச் சேர்த்து மீதி இடம் இருந்தால், அகதி மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்ற உத்தரவும் இருந்தது. ஆனால் அவ்வாறு அவற்றில் இணைய நிறைய செலவாகும் என்பதால், அகதி மாணவர்கள் அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலையில் தற்போதைய ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஈழஅகதிகள் மறுவாழ்வுக்கழகத்தின் செயல்திட்ட ஒருங்கிணைப்பாளர் சக்காரியாஸ் இறுதிப் புதிய ஆணையை வரவேற்றார்.

1980 களில் இந்தியா வந்தபோது, அகதி மாணவர்கள் படிக்க வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன என்று அவர் நினைவு கூருகிறார்.

ஆனால் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்னர் கல்வி வசதிகள் நிறுத்தப்பட்டு பிறகு மெல்ல மெல்ல அவை மீண்டும் அமுலுக்கு வந்தன என்றாலும் தொழில்முறை உயர்கல்வியைப் பொறுத்தவரை தமிழக மாணவி ஒருவர் விளையாட்டு பிரிவு உள்ளிட்ட சிறப்பு பிரிவினருக்காக இடம் ஒதுக்குவதை எதிர்த்து மனுச் செய்ய உயர் நீதிமன்றம் அப்பிரிவுகளை ஒழுங்குபடுத்த அகதிகள் விடுபட்டுப் போயினர். அது தொடர்பாக நீதிமன்றத்தில் அகதி மாணவர்கள் சார்பாக வழக்கு தொடுக்கப்பட இவ்விடயத்தில் மத்திய மாநில அரசுகள் கலந்தாலோசித்து முடிவெடுக்கலாம் என்று கூறிவிட்டது.

இப்போது மத்திய அரசு முடிவெடுக்காமல் காலந்தாழ்த்துகிறது என்று வருந்துகிறார் சக்காரியாஸ். விரைவில் மாணவர்களுக்கு சாதகமான முடிவெடுக்கப்பட்டால் அவர்கள் எதிர்காலம் சிறப்பாக விளங்கும் எனவும் சுட்டிக்காட்டிகிறார் அவர். (6)

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பாலர் கல்விக் கழகத்தின் நிர்வாகத்திலுள்ள நல்லூர் ஞானக் குழந்தைகள் இல்லம் பாலர் பாடசாலையின் 14 ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலைய மைதானத்தில் பாடசாலை ஆசிரியர் திருமதி. ஸ்ரீ வாணி ஜெயதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் சமூக அபிவிருத்தி மன்ற உப தலைவி திருமதி. நவநீதம்.ஜெகதீசன் கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினர்களாக மூத்தவிநாயகர் சனசமூக நிலையத் தலைவர் ந.ஸ்ரீரஞ்சன், நல்லூர் சமூக அபிவிருத்திச் சபையின் தலைவர். க.விஜயராஜா மற்றும் நல்லூர் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் க.செல்வராசா ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர் . (6-4)

# தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்க பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க திட்டமிட்டுள்ளார்.

பெருந்தோட்டக் கைத்தொழிற்துறைகளில் ஒன்றான தெங்கு உற்பத்தியின் பிரதான தயாரிப்பு தேங்காய் எண்ணெய் ஆகும்.

இதேவேளை தேங்காய் எண்ணெய் ஒரு போத்தலின் உற்பத்திச் செலவு 186 ரூபா வரை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக, அமைச்சர் அவர்களுக்கு மானியம் வழங்கும் திட்டம் ஒன்றை முன்வைக்கவுள்ளார். (6)

# 6 ஆயிரத்து 376 மில்.ரூபா செலவில் வடபகுதிக்கு நிரந்தர மின்சார கட்டமைப்பு

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி, சுன்னாகம்,வவுனியா பிரதேசங்களை இலக்காகக் கொண்ட மின்சாரத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இதற்கென 6ஆயிரத்து 376 மில்லியன் ரூபா நிதி செலவிடப்படவுள்ளதாக மின்வலு, எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.



இதேவேளை, சுன்னாகம் வரையிலான முதலாவது மின் இணைப்புத் திட்டத்துக்கு 3ஆயிரத்து 276 ரூபா செலவிடப்படவுள்ளதுடன் இரண்டாவது திட்டமான வவுனியா - கிளிநொச்சி வரையிலான திட்டத்துக்கு 3 ஆயிரத்து 100 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (6)


# சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்

# கேள்வி அறிவித்தல் - 2010

**சாவகச்சேரி பிரதேச சபையால் கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.**

1. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட் M-09, M-08 ) பதிவுசெய்யப்பட்டவர்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்தி, கேள்விப் பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்" என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
3. ஒவ்வொரு கேள்விகளும் தனித்தனியாக உறையிலிடப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட்டு கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. கேள்விகள் பரிசீலிக்கப்படும் போது கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
5. கேள்விப்படிவம் வழங்கப்படும் இறுதித்திகதி :- 09.07.2010 பி.ப. 2.00 மணிவரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி :- 15.07.2010 ந.ப. 12.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி :- அன்றைய தினம் (15.07.2010) பி.ப 1.00 மணியளவில்
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.
6. மேலதிக விபரங்களை சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் (கொடிகாமம்) அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

| இல | வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப்படிவப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத VAT +NBT 12%+3%ரூபா |
|---|---|---|---|---|
| 01 | வேவில் மயானத்திற்கு மடம் அமைத்தல் | 10,000.00 | 1500.00 | 225.00 |
| 02 | ஐங்கரன் சனசமூக நிலைய கட்டடம் அமைத்தல் | 5,000.00 | 1000.00 | 150.00 |
| 03 | மிருசுவில் முருகன் கோவில் வீதி திருத்தம் | 5,000.00 | 1000.00 | 150.00 |
| 04 | கைதடி பொதுநூலகத்திற்கு சிறுவர் பகுதி அமைத்தல் | 5,000.00 | 1000.00 | 150.00 |
| 05 | நாவற்குழி சித்திவிநாயகர் வீதி 2 ஆம் முறை தாரிடல் | 4,000.00 | 750.00 | 112.50 |
| 06 | புலாவி வாவையடி வீதி திருத்தம் | 3,000.00 | 750.00 | 112.50 |
| 07 | வரணி இயற்றாலை, தாவளை இயற்றாலை வீதி திருத்தம் | 3,000.00 | 750.00 | 112.50 |

சாவகச்சேரி பிரதேசசபை,
தலைமை அலுவலகம் , கொடிகாமம்.
02.07.2010

திரு.வேலுப்பிள்ளை சிவராஜலிங்கம்,
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

(C-583)


# ஒன்றுகூடல்

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க மாவட்ட தொண்டர்களுக்கான ஒன்றுகூடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல பிரிவுக் கிளைகளிலுள்ள சங்கத் தொண்டர்களை கலந்துகொள்ளுமாறு மாவட்டக் கிளை செயலாளர் கு.பாலகிருஷ்ணன் கேட்டுக்கொள்கின்றார். (4-134)

# கௌரவிப்பு நிகழ்வு

(நல்லூர்)

யாழ். மாவட்டத்தில் 37 வருட காலத்தின் பின்னர் முதன்முறையாக தெரிவு செய்யப்பட்ட யாழ்.மாவட்ட 2 ஆவது உப ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜாவைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் பிரசாரக் குழுத் தலைவரும் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் சுகாதாரத் திற்கும் கழக விஸ்தரிப்புக்குமான மாவட்ட இணைப்பாளருமான வைத்திய கலாநிதி வை.தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. (4-134)

# முதல்வர் கருணாநிதியும் போர்க்குற்றவாளியே!

## ஐ.நா.குழுவிடம் ஆதார பூர்வமாக நிரூபிப்போம்

## ஜெயலலிதா அறிக்கை



(சென்னை)

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தி அவர்களை கொலை செய்ய இலங்கை அரசுக்கு உதவி புரிந்த முதல்வர் கருணாநிதியும் ஒரு போர்க் குற்றவாளி'' தான் என்று அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா குற்றம்சாட்டியுள்ளார்.

இலங்கையில் நடந்து முடிந்த உள்நாட்டுப் போரில் உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்களை ஆராய்வதற்காக, ஒரு குழுவை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பான் கீ மூன் நியமித்து இருப்பதை அவர் வரவேற்றுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் நடந்து முடிந்த உள்நாட்டுப் போரில் உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்களை ஆராய்வதற்காக இந்தோனேசியாவின் முன்னாள் தலைமை வழக்கறிஞரின் தலைமையில் மூன்று பேர் கொண்ட ஒரு குழுவை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் பான் கீ மூன் நியமித்து இருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வெளி வந்துள்ளது வரவேற்கத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபை தலைவரின் இந்த நடவடிக்கை இலங்கையில் உள்ள தமிழ் இனமும் தமிழ் மக்களும் இன்னமும் அனைத்தையும் இழந்து விடவில்லை என்ற நம்பிக்கையை நமக்கு அளிக்கிறது.

ஐ.நா சபையின் பிரதிநிதிகள் குழுவிற்கு நுழை விசைவு தருவதை இலங்கை அரசு தனது இயல்பிற்கு ஏற்ப மறுத்து வருகிறது. இது இலங்கை அரசின் குற்ற உணர்வை வெளிப்படுத்துகிறது.

மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு மறைக்க எதுவுமில்லை என்றால் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் சுதந்திரமாக இலங்கைக்குள் வர அனுமதித்து எங்குவேண்டுமானாலும் செல்ல ஆட்சேபனை தெரிவிக்கக் கூடாது. பான் கீ மூன் அறிவித்துள்ள மூவர் குழுவில் இடம்பெற்றுள்ளவர்கள் இந்தோனேசியா, அமெரிக்கா மற்றும் தெற்கு ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த சட்ட வல்லுநர்கள்.

இவர்கள் சுதந்திரமாக இலங்கைக்குள் புக அனுமதிக்கப்பட்டால் மறைக்கப்பட்ட அத்துமீறல்கள், மனித உரிமை மீறல்கள், கொடுமைகள் வெளிக்கொணரப்படும் என்பதில் ஐயமில்லை.

விடுதலைப் புலிகளின் தலைமையை தீர்த்துக்கட்டியதை அடுத்து கடந்த வருடம் மே 19 ஆம் திகதி இலங்கை உள்நாட்டுப் போர் அதிகாரப்பூர்வமாக முடிவுக்கு வந்தது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. ஆனால் இதற்கு மூன்று வாரங்களுக்கு முன்பே கடந்த வருடம் ஏப்ரல் 27 ஆம் திகதி தமிழக முதல்வர் தலைமைச் செயலகம் செல்லும் வழியில் திடீரென்று அண்ணா நினைவிடம் அருகில் தன்னுடைய பிரயாணத்தை நிறுத்தி இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான தாக்குதலை இலங்கை அரசு நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்தார்.

மூன்று மணி நேரத்திற்குப் பின் இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட்டிருப்பதாக தனக்கு தகவல் கிடைத்து இருக்கிறது என்று அறிவித்தார். கனரக ஆயுதங்கள் இனிப் பயன்படுத்தப்படமாட்டாது என்ற உறுதிமொழியையும் அவர் அளித்தார். பின்னர் 'உண்ணாவிரதத்தை' நிறுத்தி விட்டு வீட்டிற்கு சென்று விட்டார். மக்கள் முதல்வரை நம்பினார்கள். தமிழக மக்கள் மட்டுமல்ல இலங்கையில் உள்ள தமிழ் மக்களும் நம்பினார்கள்.



அப்பாவி இலங்கைத் தமிழர்கள் முதல்வரின் வார்த்தையை நம்பி போர் முடிந்து விட்டது என்று நினைத்து பதுங்கு குழிகளி லிருந்து வெளியே வந்தனர். அப்போது வானத்தில் வட்டமிட்டிருந்த அதிவேக இலங்கை ஜெட் போர் விமானங்கள் கொத்துக் கொத்தாக குண்டு மழைபெய்தன. இரண்டே நாட்களில் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவி இலங்கைத் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

''நேரடியாக போர் நடவடிக்கைகளில் பங்கேற்காத அப்பாவி மக்களுக்கு எதிராகவோ அல்லது தனிப்பட்ட நபர்களுக்கு எதிராகவோ திட்டமிட்டு தாக்குதலை திருப்பிவிடும் செயல் போர்க் குற்றமாகும்'' என சர்வதேச சட்டம் கூறுகிறது.

போர் நிறுத்தம் ஏற்படாத போது போர் நிறுத்தம் ஏற்பட்டு விட்டதாக தெரிவித்து நிராயுதபாணிகளாக ஆதரவற்ற நிலையில் இருந்த அப்பாவி இலங்கைத் தமிழர்களை இலங்கை இராணுவத்திற்கு இரையாக்கியதன் மூலம் நேரடியாக போரில் பங்கேற்காத அப்பாவி மக்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தி அவர்களை கொலை செய்ய இலங்கை அரசுக்கு உதவி புரிந்திருக்கிறார் முதல்வர்.

ராஜபக்ஷ சகோதரர்கள் மற்றும் இலங்கை இராணுவத்தில் பணிபுரியும் சிப்பாய்கள் எவ்வாறு போர்க் குற்றவாளிகள் என்று கருதப்படுகிறார்களோ அதைப் போலவே கருணாநிதியும் ஒரு போர்க் குற்றவாளிதான்.

ஐக்கிய நாடுகள் சபை பிரதிநிதிகள் குழு இலங்கை செல்லும் போது அ.தி.மு.கவைச் சேர்ந்த குழு ஐக்கிய நாடுகள் குழுவைச் சந்தித்து கருணாநிதி ஒரு போர்க் குற்றவாளி என்று பிரகடனம் செய்யத் தேவையான ஆதாரங்களை அளிக்கும்.

சதிச் செயல்களால் போரில் உயிரிழந்த ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்களுக்காக இதையாவது நாம் செய்ய வேண்டும். இதைத்தான் நம்மால் செய்ய முடியும் என்று ஜெயலலிதா கூறியுள்ளார். (6)




# தமிழை மேம்படுத்தும் நடவடிக்கையில்

## — சென்னைப் பல்கலைக்கழகம் —

## வளாகங்களுக்கு தமிழறிஞர்களின் பெயர்கள்

(சென்னை)

சென்னைப் பல்கலைக்கழக வளாகங்களுக்கு தொல்காப்பியர், சேக்கிழார், கம்பர், பாரதியார், மறைமலை அடிகளார் ஆகியோரின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. இதுகுறித்து சென்னை பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ஜி.திருவாசகம் கூறு கையில்,

கோவை உலகத் தமிழ்செம்மொழி மாநாடு நடைபெற்றது. தமிழ் மற்றும் தமிழ் அறிஞர்கள் பற்றி மாணவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். நிர்வாகங்களில் தமிழை ஆட்சி மொழியாக கொண்டு வர வேண்டும். தமிழை பொறியியலிலும், மருத்துவத்திலும் கொண்டு வர வேண்டும் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் தமிழை மேம்படுத்த வேண்டும். தமிழ் மொழியை வளர்க்கவேண்டும் என்று தமிழ் அறிஞர்கள் வலியுறுத்தினார்கள்.

அதன்படி சென்னை பல்கலைக்கழகத்தில் தமிழை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க பல்கலைக்கழக ஆட்சி மன்ற குழுக்கூட்டத்தில் சில முடிவுகள் எடுக்கப்பட்டன.

சென்னை பல்கலைக்கழக சேப்பாக்கம் வளாகத்திற்கு தொல்காப்பியர் வளாகம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. சேத்பட் வளாகத்திற்கு, சேக்கிழார் பெயரும், மெரினா வளாகத்திற்கு, பரிதிமாற்கலைஞர் பெயரும், தரமணி வளாகத்திற்கு, மறைமலை அடிகள் பெயரும், மதுரவாயல் வளாகத்திற்கு, கம்பர் பெயரும், கிண்டி வளாகத்திற்கு பாரதியார் பெயரும், தற்போது சூட்டப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல அந்தந்த வளாக வாயிலில் அந்தந்த தமிழ் அறிஞர்களின் சிலைகளும் நிறுவப்படும்.

அத்துடன் வழிக்கல்வியை மேம்படுத்தும் பொருட்டு, சென்னை பல்கலைக்கழகத்தில் பி.எச்.டி.என்ற ஆராய்ச்சி படிப்பை படிக்கும் மாணவ மாணவிகள் வருங்காலங்களில், ஆராய்ச்சி தொகுப்பை சமர்ப்பிக்கும்போது ஆங்கிலத்தில் சமர்ப்பித்தாலும் அதை அப்படியே மொழிபெயர்த்து தமிழில் ஒரு பிரதி சமர்ப்பித்தால் அந்த மாணவருக்கு ரூ.20 ஆயிரம் ஊக்கத் தொகையாக வழங்கப்படும். மொழி பெயர்க்கப்பட்ட தமிழ் சரியாக உள்ளதா என்பதை கவனிக்க துணை வேந்தர் தலைமையில் 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

பி.எச்.டி.ஆராய்ச்சி படிப்பை தமிழ் மொழியில் படித்தால் மாதம் தோறும் மாணவருக்கு தலா ரூ.5 ஆயிரம் ஊக்கத்தொகை வழங்கப்படும். இது அறிவியல் மாணவர்கள் 15 பேருக்கும் கலைத்துறை மாணவர்கள் 10 பேருக்கும் வழங்கப்படும்.

மேலும் சென்னை பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆட்சிமொழியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் 2 ஆயிரம் பேர் உள்ளனர். இவர்கள் ஜுலை 5 ஆம் திகதி முதல் தமிழில் தான் கையெழுத்திட வேண்டும். இது கட்டாயம்.

பிறமொழியை தாய் மொழியாகக் கொண்டவர்களும் தமிழில் கையெழுத்திட வேண்டும் என்று வேண்டு கோள் விடுக்கிறோம். அவர்களை கட்டாயப் படுத்தவில்லை. நான் பல வருடங்களாக தமிழில் தான் கையெழுத்திடுகிறேன். தாய் மொழி மீது ஆர்வம் இருக்கவேண்டும்.

சென்னை பல்கலைக்கழத்திற்குள் தமிழில் கையெழுத்திடாத கோப்புகளை பார்க்கமாட்டேன். செப்டம்பர் 15 ஆம் திகதிக்குள் சென்னை பல்கலைக்கழக அனைத்து பிரிவுகளுக்கும் தமிழ் மென்பொருள் வழங்கப்படும். சென்னை பல்கலைக்கழகத்தில் காலம் செல்லச்செல்ல அனைத்து நடவடிக்கைகளும் தமிழில் உருவாகும்.

சென்னை பல்கலைக்கழகத்தில் உள்ள தமிழ் அகராதியை புதுப்பிக்கும் பணி நடந்து வருகிறது. தமிழில் உள்ள புதிய வார்த்தைகளைச் சேர்த்து வருகிறோம். இலட்சத்திற்கும் மேற்பட்ட வார்த்தைகளை சேர்க்க உள்ளோம். புதிய வார்த்தைகளை சேர்ப்பதற்காக புதிய இணையதளத்தை உருவாக்கி உள்ளோம். புதிய வார்த்தைகள் சேர்க்கப்பட்ட தமிழ் அகராதியை இந்த வருடத்திற்குள் சென்னை பல்கலைக்கழகம் வெளியிடும். அதிக வார்த்தைகளை தருபவர்களுக்கு பரிசு வழங்கப்படும் என்று துணைவேந்தர் ஜி.திருவாசகம் தெரிவித்தார். (6-4)

# கருணாநிதிக்கு கோயில் கட்டியவரே அகற்றினார்

(குடியாத்தம்)

வேலூர் மாவட்டம், குடியாத்தம் அருகே முதல்வர் கருணாநிதிக்கு கோயில் கட்டிய தி.மு.க.தொண்டரே நேற்று முன்தினம் அவரது சிலையை அங்கிருந்து அகற்றியதாக தெரிவிக் கப்படுகிறது.

கட்சித்தலைமையில் இருந்து வந்த உத்தரவையொட்டி, அவர் சிலையை அகற்றியதாகக் கூறப்பட்டது.

குடியாத்தம் அருகே உள்ள பரதராமி அடுத்த சாமிரெட்டிபல்லி கிராமத்தில், ஒன்றிய தி.மு.க. மாவட்ட பிரதிநிதியும், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினருமான ஜி.ஆர். கிருஷ்ண மூர்த்தி , முதல்வர் கருணாநிதிக்கு கோயில் அமைத்தார்.

தன் சொந்த நிலத்தில், சொந்தப் பணம் ரூபா 2இலட்சம் செலவில் கட்டம் கட்டி, அதில் கருணாநிதியின் இரண்டரை அடிஉயர மார்பளவு சிலைவைக்கப்பட்டு அறையின் முகப்பு சுவரில் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின், சட்டம் மற்றும் சிறைத்துறை அமைச்சர் துரைமுருகன்,தி.மு.க. மாவட்டச் செயலர் ஆர்.காந்தி ஆகியோரின் படங்களும் பதிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், தனக்கு கட்டிய கோயிலை அகற்றுமாறு மாவட்டச் செயலாளர் ஆர். காந்தியிடம் முதல்வர் கருணாநிதி கூறியதாகக் தெரிகிறது.

இதுகுறித்து ஜி.ஆர்.கிருஷ்ணமூர்த்திக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையே, அனுமதியின்றி கட்டிய கோயிலை அகற்றுவதற்காக குடியாத்தம் வட்டாட்சியர் எம்.வசந்தா, பொலிஸ் கண்காணிப்பாளர் வி.காசிவிஸ்வநாதன் உள்ளிட்டோர் அங்கு விரைந்தனர்.

பொலிஸாரும், வருவாய்துறை துறையினரும் வருவதையறிந்த ஜி.ஆர்.கிருஷ்ண மூர்த்தி, தான் கட்டிய கோயிலில் இருந்த கருணா நிதி சிலையை துணியால் சுற்றி, நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் வீட்டுக்குக் கொண்டு சென்றுவிட்டார். மேலும், அங்கிருந்த கல்வெட்டை உடைத்து, அகற்றினார்.இதைத் தொடர்ந்து அங்கு வந்த வருவாய்த்துறையினர், ஏதும் செய்யாமல் அங்கிருந்து திரும்பினர்.தற்போது கோயில் காலியாகக் காட்சியளிக்கிறது. (6)

# வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் பற்றி சற்றுச் சிந்திக்க வேண்டும்

**தோட்டத் தொழிலாளிகளாக மாற்றவா வன்னியில் இறப்பர் செய்கை என 01.07.2010 இல் வெளியான ஆசிரியர் தலையங்கத்திற்கு வாசகர் ஒருவர் எழுதிய கருத்துரை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது. (ஆ-ர்)**

தங்களுடைய பத்திரிகையில் வெளியான 01.07.2010 அன்றைய ஆசிரியர் தலையங்கம் தொடர்பாக சில கருத்துகளை முன்வைக்க விரும்புகின்றேன். உண்மையில் வன்னி பெருநிலப்பரப்பில் செய்கைபண்ண திட்டமிடப்படுவதாக கூறப்படும் இறப்பர் செய்கை தவிர்க்கப்பட வேண்டும்.

ஏனெனில் வன்னிமண்ணின் காலநிலையும் மண்ணின் தன்மையும் தென்னை தவிர்ந்த ஏனைய பெருந்தோட்ட பயிர்களுக்கு கூடிய பொருத்தப்பாட்டை (optimum Suitability) கொண்டிருக்கவில்லை. முதன்மைக் காரணியான (Principle Factor) மழைவீழ்ச்சி போதுமானதாக இல்லை. (சில வேளைகளில் பெறுமதியான காட்டு மரங்களை பெறுவதற்கு இறப்பர் செய்யப் போவதாக எம்மை உற்சாகப்படுத்தக்கூடும்) ஆனால் வன்னிமண்ணின் காலநிலையும் மண்ணின் தன்மையும் நெல், தென்னை மற்றும் ஏனைய களப்பயிர்களுக்கு (OFC) பொருத்தமானதாகும்.

வடமாகாணத்திற்கு தேவையான நெல் மற்றும் தேங்காயின் கணிசமான பகுதி வன்னியிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது.

அரசாங்கம் என்னதான் நாங்கள் நெற்செய்கை நிலங்களை இதற்கு பயன்படுத்தப் போவதில்லை என்று கூறினாலும் இதற்கு நிலத்தை பெறுவதற்கு 400 ஏக்கரில் வன அழிப்பை மேற்கொண்டால் இறப்பர் அதன் முழு விதானத்தை (Complete Canopy) உருவாக்க எடுக்கும் 5-6 வருடங்களுக்குள் வடமாகாணம் பாரிய காலநிலை சீர்கேட்டுக்கு உட்படுவது சர்வநிச்சயம். (இப்போதெல்லாம் கோடை காலத்தில் யாழ்ப்பாணத்தில் வீடுகளில் இருக்க முடிவதில்லையே).

மேலும் எமது மக்கள் இறப்பர் செய்கையின் முகாமைத்துவம் (Agronomic Management), அறுவடை (Harvesting- Tapping of Latex), பரிகரிப்பு (Processing) மற்றும் அதனோடிணைந்த உற்பத்தி தொழிற்துறை (Rubber Related Industry) தொடர்பில் அறிவோ, அனுபவமோ இல்லாதவர்கள். எனவே இது எமது மக்களின் மண்ணில் வேறொருவருக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதாக அமைந்துவிடும் ஆபத்து உள்ளது.

அத்துடன் இறப்பர் பாலானது சேகரிக்கப்பட்டு குறுகிய கால இடைவெளியில் பரிகரிப்பு நிலையங்களுக்கு எடுத்து செல்லப்பட வேண்டும் அல்லது பரிகரிப்பு நிலையங்களை வன்னியில் அமைப்பதென்றால் மீண்டும் கழிவகற்றலிலும் நீர் முகாமைத்துவத்திலும் பிரச்சினைகள் எழுவதில் ஐயமில்லை.

**இ.ஈஸ்வரன்,**
விவசாய தொழில்நுட்பமும்
முகாமைத்துவமும் (2ம் வருடம்)
விவசாயபீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்.

முடிவாக வன்னியில் இறப்பர் செய்கையானது முதலீட்டுக்குரிய உற்பத்தியை (No Potential Productivity) தராது என்பதுடன் பல சுற்றாடல் பிரச்சினைகளுக்கும் மட்டுமன்றி பெருந்தோட்ட தொழில்துறைக்கே உரித்தான பொருளாதார - சமூக- கலாசார பிரச்சினைகளுக்கும் (Economic- Socio- Cultural Problems) வழிவகுக்கும்.

ஆகவே இத்திட்டத்தினை தயவுசெய்து கைவிட்டு நீர்ப்பாசனத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் நெற் செய்கையையும், கடற்கரை நிலங்களில் தெங்குச் செய்கையையும் ஏற்கனவே காடழிக்கப்பட்ட வீதிகளின் இருமருங்கிலும் தேக்கு செய்கையும் மேற்கொள்வதன் மூலம் எமது மக்களை வாழ்விக்கலாம் அல்லவா.

எங்கே எமது அரச அதிகாரிகளும் விவசாயத் திணைக்களமும் சிந்தித்து நடவடிக்கை எடுப்பார்களாக. மீண்டும் ஒரு தடவை நமது வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் நிஜமாகட்டும்.

## 01.07.2010 அன்று வெளியான வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம்

### தோட்டத் தொழிலாளிகளாக மாற்றவா வன்னியில் இறப்பர் செய்கை

வன்னிப் பெருநிலப்பரப்பின் முக்கியமான கிளிநொச்சி, முல்லைத்தீவு பிராந்தியத்தில் இறப்பர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு அரசு திட்டமிட்டு அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

வன்னிப் பெருநிலப்பரப்பு தமிழ் மக்களின் விவசாய பூமி. நெற்தானியம் முதல் விவசாய உணவுத் தானியங்களை விளைவிக்கக் கூடிய மண்.

என்.எம்.பெரேரா நிதியமைச்சராக இருந்த போது வன்னிப் பெருநிலப்பரப்பு நெற்களஞ்சியமாக விளங்கியது.

அதுதொடக்கம் வன்னியில் விவசாயச் செய்கையில் தமிழ் மக்கள் தங்களை அர்ப்பணித்துச் செயற்பட்டு வந்தனர்.

கொடூர யுத்தம் அந்த மக்களின் தேட்டங்களை எல்லாம் சங்காரம் செய்தாயிற்று.

இப்போது அவர்கள் மீண்டும் குடியேறுகின்றனர். நிச்சயம் அங்கு மீண்டும் உணவுத் தானியங்கள் விளையும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

நிலைமை இதுவாக இருக்கும்போது சுமார் நானூறு ஏக்கர் நிலப்பரப்பில் இறப்பர் செய்கைக்கு அரசு நடவடிக்கை எடுத்துவருவதானது வன்னியிலுள்ள தமிழ்மக்களை பெருந்தோட்டச் செய்கைக்கு மாற்றுமொரு நடவடிக்கை என்பது உணரப்பட வேண்டிய விடயமாகும்.

அதேநேரம் மலையகத்தில் தமிழ் மக்கள் பெருந்தோட்டத் தொழிலாளிகளாக ஆக்கப்பட்டு இன்றுவரை அவர்கள் மீளமுடியாதவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்த அவலம் தேயிலை, இறப்பர் தோட்டங்கள் அரசினதும் முதலாளி வர்க்கத்தினதும் ஆதிக்கத்திற்குள் அகப்பட்டதன் விளைவாக ஏற்பட்டதாகும்.

எனவே வன்னிப் பெருநிலப்பரப்பில் 400 ஏக்கர் நிலத்தில் இறப்பர் செய்கையை மேற்கொள்வதன் மூலம் மிகப்பெரியதொரு காடழிப்பையும், அதேநேரம் விவசாயச் செய்கையில் இருந்து பெருந்தோட்ட விவசாயத்திற்கு தமிழ் மக்களை நிலைமாற்றம் செய்வதுமான நிகழ்வாக அமையும்.

ஆகவே வன்னியில் இறப்பர்செய்கை மேற்கொள்வதை முழுமையாக எதிர்ப்பதற்கு புத்திஜீவிகள் முன்வரவேண்டும்.

தோட்டச்செய்கையை அரசு விரும்பினால் தீவகத்தில் வடக்கு வீதியிலுள்ள நிலப்பரப்பில் சவுக்குத் தோட்டம் செய்யலாம். தேவையாயின் அங்கு சவுக்குத் தோட்டம் செய்யமுடியுமா என்பதை ஆராய்வதற்கு இந்திய மற்றும் சீன நாட்டவர்களை அழைத்து வந்து காட்டலாம்.

சவுக்குச் செய்கை யாழ்ப்பாண மக்களின் விறகுத் தேவையை பூர்த்திசெய்யும் அல்லவா?





இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடனும் அவுஸ்திரேலிய, அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியுடனும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் துணையுடன் யு.என்.கபிற்றாற் நிறுவனத்தினால் பொலிகண்டி கிழக்கு பிரதேசத்தில் 132 வீடுகள் அமைக்கப்பட்டுப் பூர்த்திவிழா அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வீடமைப்பு திட்டத்தை விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்க செயலாளர் கு.பாலகிருஷ்ணனும் பொது வேலைத் திட்டத்தில் பூர்த்தியான தண்ணீர் விநியோகத்தினை யு.என்.கபிற்றாற் நிறுவன வடபிராந்திய உதவி முகாமையாளர் எஸ்.யோகேந்திராவும் நாடாவெட்டித் திறந்து வைப்பதைப் படங்களில் காணலாம்.

(நல்லூர் நிருபர்)

# தமிழ் மொழியின் சிறப்புப் பற்றி தமிழர் அல்லாதவர்களின் கருத்து

## தமிழோடு வாழ்வோம் தமிழனாய் வாழ்வோம்

கோவை மாநாட்டில் அதிக ஆர்வத்துடன் பங்கேற்றவர்கள், வெளிநாட்டில் இருந்து வந்திருந்த 'தமிழர் அல்லாத' அறிஞர்கள் தான். அவர்கள் கட்டுரை வாசித்தார்கள், கருத்துரை வழங்கினார்கள் என்பதைத் தாண்டி, அழகாகத் தமிழ் பேசினார்கள். "வணக்கம்! நலமாக இருக்கிறீர்களா?" என்று கரம் குவிக்கிறார்கள்.


எப்போதுமே நாம் அடுத்தவர்கள் சொன்னால் கொஞ்சமாவது அக்கறையுடன் கேட்போம். "தமிழ் வளர நீங்கள் சொல்லும் ஆலோசனைகள் என்ன?" என்று அவர்களிடம் கேட்டோம்.

**உல்ரிச் நிக்கோலஸ் (ஜெர்மனி)**



"நிலாச் சோறு ஊட்டுகையில் குழந்தைகளுக்குக் கதை சொல்லுங்கள். அம்புலி மாமால் ஆரம்பித்து ஆனை, சிங்கம் என்று ஆயிரம் கதைகள் அழகுத் தமிழில் உண்டு. பிள்ளைப் பராயத்தில் இருந்தே தமிழோடு இணைந்து குழந்தைகள் நடந்தால், அவர்களும் வளர்வார்கள், தமிழும் தானாக வளரும். ட்விங்கிள் ட்விங் கிள் லிட்டில் ஸ்டாரும், ரெயின் ரெயின்கோ அவே-வும் இத்தனை ஆண்டு களாக நமக்கு எதைச் சாதித்துத் தந்து விட்டன? தமிழை அழித்ததைத் தவிர!"

**சைமன் (நெதர்லாந்து)**



"ஒரு மொழியின் வளர்ச்சியில் ஊடகங்களின் பங்கு முக்கியமானது. தமிழர்களைச் சென்றடைய வேண்டிய செய்திகளைச் செந்தமிழில் இல்லாவிட்டாலும் நடைமுறைத் தமிழிலாவது தர வேண்டும். இங்கு ஆங்கில ஆதிக்கம் நிரம்பி வழிகிறது. எனவே, இனி வரும் காலங்களில் இனிய தமிழோடு மக்களைச் சந்திக்கலாமே!"

**டிட்மிடா (ஜெர்மனி)**



தமிழகப் பள்ளிகளில் கட்டாயத் தமிழ்க் கல்வி வந்துள்ளதாக அறிகிறேன். தமிழ் நாட்டிலேயே தமிழில் படிப்பதைக் கட்டாயமாக்க வேண்டிய நிலை வந்தது வெட்கக்கேடு. இருந் தாலும் பரவாயில்லை. இன்று ஆரம் பித்திருக்கும் இந்த கல்விப் பயணம் எந்த ஒரு அரசியல் மாற்றத்தினாலும் மாறக்கூடாது. சில நேரங்களில் உணவைக் குழந்தைகளுக்குத் திணித்து ஊட்டுகிறோமே, அது போலத்தான் இதுவும் நாள்பட நாள்பட இந்த உணவு பிடித்துப் போகும்!"

**தாமஸ் லேமன் (ஜெர்மனி)**



'ஆங்கிலத்தில் பேசினால்தான் கௌரவம் என்ற இழிநிலை இன்றைய இளைஞர்களின் மனதில் புதைந்து இருக்கிறது. மிக மோசமான கிருமி இது. வணக்கம், மிக்க நன்றி என்கிற வார்த்தைகளில் இல்லாத மரியாதையும் உவகையுமா ஆங்கில மொழியில் இருக்கிறது. உன்தாயோடும் தந்தையோடும் கதைக்கையில்" ஆங்கிலம் எதற்கு என்பதுதான் எனது கேள்வி. நடைமுறை வாழ்க்கையில் பெரும்பான்மையான விடயங்களைத் தமிழ்ப்படுத்துங்கள். அதாவது தமிழிலேயே கதையுங்கள். ஒவ்வொரு நாளும் தமிழோடு வாழ் வோம், தமிழனாய் வாழ்வோம்.!"

**கலையரசி (சீனா)**



'இதுபோன்ற ஒரு மாநாட்டு வேளையில் தமிழை ஞாபகம் கொள்கிறீர்கள். பிறகு மறந்து போவீர்கள் தானே? இங்கேயே பார்த்துவிட்டேன். என்னோடு தெளிவான தமிழில் பேசுகையில், பல பெண்களுக்குச் சிரிப்பும் வெட்கமும் வருகிறது. ஏன் இந்தத் தயக்கம்? நியாயப் படி எனக்குத்தான் சிரிப்பு வரவேண்டும். தமிழகத்தில் இருந்து ஒளிபரப்பாகும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் வரும் பெண்களும் ஆண்களும் நித்தம் நித்தம் தமிழ்க் கொலை புரிதலைச் சகிக்க முடியவில்லை.


அந்த நிகழ்ச்சியைப் பார்த்து வள ரும் குழந்தைகளுக்கும் அந்த சிதைக்கப்பட்ட தமிழ்தானே மனதில் பதியும். ஆகவே, ஆரோக்கியமான தமிழ் வாழும் இடமாக உங்கள் சுற்றுப்புறத்தை மாற்றுங்கள். நான் சீன இனத்தைச் சேர்ந்தவள். தமிழ் மீது கொண்ட காதலால் தான் என் பெயரை கலையரசி என்று மாற்றியுள்ளேன். எவ்வளவு இனிமையான பெயர்!"

**பிருந்தா பெக் (கனடா)**



"சமுதாயத்துக்கு எந்த ஓர் உணர்வையும் அழுந்த ஊட்டுவதில் ஈடு இணை இல்லாத வலிமை, கலை மற்றும் இலக்கியத்தின் வசம்தான் இருக்கிறது. பட்டிக்காட்டில் ஆரம்பித்து நவநாகரிக நகரம் வரை தமிழ் மொழியின் நங்கூரத்தை அழுத்திப் பாய்ச்ச நல்ல தமிழில் நயமான இலக்கியங்கள் தேவை. காலத்துக்கு ஏற்றபடி புதுவித இலக்கிய வடி வங்கள் உடனடியாகத் தமிழில் வேண் டும். அவை சுவையுடன் இருத்தல் அவசியம்."

**அஸ்கோ பர்போலா (பின்லாந்து)**




"பலமொழிகள் இன்று அழிவின் விளிம்பில் நிற்பதற்கு 'உலகமயமாக்கல்' என்ற கருத்துரு ஒரு காரணமாகப் பேசப்படுகிறது. இதற்கு தமிழும் தப்ப வில்லை.

உலகமயமாக்கலுக்கு இயைந்து நடந்தால் தான் நாமும் வளரமுடியும், வல்லரசாக முடியும் என்றொரு மாயையைப் பரப்பி வருகிறார்கள். நாட்டின் வளர்ச்சிக்காக நம்மொழியைக்காவு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

'உலகமயமாக்கல் போக்கினாலேயே ஆங்கிலத்தின் பின் நடக்கிறேன். அப்போது தான் இந்த உலகில் நானும் பிழைக்க முடியும்' என்பது வெற்று உளறல். தாய்மொழியிலேயே கற்று இன்று எல்லா நிலைகளிலும் தலை நிமிர்ந்து நிற்கும் நாடுகளாக ஜப்பானும் சீனாவும் இல்லையா? எனவே எந்தச் சூழலுக்காகவும் மொழியைப் பலியிடாதீர்கள். அது நம் சந்ததியை நரபலி இடுவதற்குச் சமம்!"

**அலெக்சாண்டர் துபியான்ஸ்கி (ரஷ்யா)**



'உங்கள் மொழியைப் படிக்க ரஷ்ய நாட்டில் எத்தனையோ பேர் ஆர்வமாக வருகிறார்கள். தமிழ் படித்தால் வேலை கிடைக்கும்... பணம் கிடைக்கும் என்று அவர்கள் வரவில்லை. தமிழ்மொழியைப் படித்தால் சுவையாக இருக்கிறது, அதன் அனைத்துப் பாடல்களும் மனிதாபிமானம் பேசு கின்றன, மனிதத் தன்மையை உணர்த் துகின்றன என்பதால் தான் அதைப் படிக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆர்வத் துடன் தமிழ் கற்கவந்த மாணவி ஆனா வுடன்தான் நான் இந்த மாநாட்டுக்கு வந்துள்ளேன்.

ஆளுக்கு ஓர் இலக்கியத்தை முதலில் தேர்ந் தெடுத் துப் படித்துப் பாருங்கள். அதன் பிறகு உங்களால் தமிழில் இருந்து மீள முடி யாது. வேலைக்காக, பணத்துக்காக இல்லா மல் இலக்கியம் படியுங்கள்!"

**கிரிகோரி ஜேம்ஸ் (பிரிட்டன்)**

"இதுபோன்ற மாநாடுகளை 10 ஆண்டுகளுக்கு ஒரு மு-றையோ 15 ஆண்டுகளுக்கு ஒரு முறையோ நடத்தினால் மட்டும் போதாது.

தமிழ் ஆய்வு மாநாடுகளைத் தொடர்ந்து நடத்துவதன் மூலமாக மட்டுமே மக்களிடம் மொழி சார்ந்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

இவையே மொழிக்கு உந்து சக்தியாக அமையும். இது போன்ற நிகழ்வுகள் வெறும் விளம்பரங்களாக இல்லாமல், ஆக்கபூர்வமான ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு இருக்க வேண்டும்!

**ஜார்ஜ் ஹார்ட் (அமெரிக்கா)**



"நான் முதலில் வடமொழியைக்கற்றவன். அதன் பிறகுதான் தமிழைப் படித்தவன். உங்களது மொழியில் அனைத்துத் தன்மைகளுமே இருக்கின்றன. இப்படி ஒரு வளம் வேறு எந்த மொழிக்கும் இல்லை. இந்திய அரசு எழுதிக் கேட்டபோது, தமிழைச் செம்மொழியாக ஏன் ஆக்க வேண்டும் என்பதைப் பல்வேறு ஆதாரங்களுடன் எழுதி அனுப்பியவன் நான்.

இது போன்ற வரலாற்றையும் மொழி வளத்தின் தன்மையையும் மற்ற நாடுகளில் இருக்கும் மொழியியல் அறிஞர்கள் அனைவருக்கும் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டிய கடமை இருக்கிறது. எப்படிப் பட்ட வரலாற்றுக்கு, வளத்துக்குச் சொந் தக்காரர்கள் நாங்கள் என்று நீங்கள் மட்டுமே சொல்லிக் கொண்டு இருந்தால் போதாது.

அதை உலகமும் ஒப்புக் கொள்ளும் வகையில் கொண்டு சேர்க்க வேண்டும். அதைச் செய்தால் தமிழக த்துக்கு வெளியில் இருந்து எங்களைப் போன்ற ஆர்வலர்கள் தமிழ்த் தொண்டு ஆற்றக் கிளம்பி வருவார்கள்!"

நன்றி ஆனந்த விகடன்

தவறு செய்துவிட்டோம் என்று தெரிந்ததும் அதை ஒப்புக்கொள்ள ஒருநாளும் வெட்கப்படாதே. – ஆவ்பரி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழ் மக்கள் விடும் மகா தவறு என்ன?

இலங்கையில் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துன்ப துயரங்கள் ஏராளம். இத் துன்ப துயரங்கள் முற்றுப்பெறாதவையாக ,நீண்டு செல்வதைப் பார்க்கும்போது எங்கோவொரு மகா தவறு நடந்து கொண்டிருப்பதை உணர முடிகின்றது.

அந்தத் தவறு எங்கே இருக்கிறது என்று நேர்மைத்திறனுடன் ஆராய்ந்தால் ,அது தமிழ் மக்களிடமே உண்டென்ற உண்மையை உணர முடியும்.

இந்த உணர்வை வெறுப்புடன் நோக்குவது தமிழ் இனத்துக்கு மேலும் கெடுதி விளைவிப்பதாக அமையும்.

அவ்வாறாயின் தமிழ் மக்கள் விடும் தவறு என்னவென்ற கேள்வி உங்களிடம் எழுமாயின் அதில் நியாயம் இருக்கவே செய்யும். அந்தக் கேள்விக்கான பதிலை தருவதும், தந்த பதில் சரியானதா என சிந்திப்பதும் ஏக காலத்தில் நடந்தாக வேண்டியவை.

இதனடிப்படையில் தமிழ் மக்கள் அரசியலை அரசியல்வாதிகளுக்கென ஒதுக்கிவிட்டமை முதலாவது மகா தவறாகும்.

அதாவது வாக்களிப்பது மட்டுமே எங்களுடைய கடமை, அதன் பின்பு அரசியல்வாதிகள், அரசியல் விவகாரத்தைப் பார்த்துக் கொள்ளட்டும் என்ற மனநிலை தமிழ் மக்களிடம் வலுவடைந்து விட்டது.

அந்த வலுப்பெறல் தற்போது கிரந்தம் முற்றி பௌந்திரம் ஆக்கியது போல,வாக்களிப்பது கூட நமக்கு வேண்டாம். வாக்களிப்பு நடந்தால் என்ன, நடக்காவிட்டால் என்ன எதுவாயினும் முடிந்து போகட்டும் என்ற மனநிலைக்கு முழுமைப்படுத்தி விட்டது. இதனை நன்குணர்ந்த தமிழ் அரசியல்வாதிகள் தாம் நினைத்தபாட்டில் எகிறிப்பாய்கின்றனர். சிலர் விலை போகின்றனர். சிலர் பதவி ஆசைக்கு அடிமையாகி விட்டனர். இன்னும் சிலர் அரசியலில் எடுக்க வேண்டிய இலாபத்தை எடுத்துவிட்டு சுகபோகமாக இருக்கலாம் என்ற நினைப்பில் வியூகம் அமைக்கின்றனர்.

ஆக ஒரு சிலர் மட்டுமே ஏழைத் தமிழ் மக்களின் அவலத்தை உணர்ந்துள்ளனர். அவர்களும் எதுவும் செய்ய முடியாதவாறு அரசியல் பேய்கள் அவர்களை அடக்கி விடுகின்றன.

நிலைமை இதுவாக இருக்கும் போது தமிழ் மக்களுக்குஎந்த விடிவும் கிடைக்கப்போவதில்லை. என்றைக்கு தமிழ் மக்கள் அரசியலை தமக்கானதாக ஏற்றுக்கொண்டு விழிப்படைகின்றார்களோ அன்றைக்குத்தான் தமிழ் இனம் விமோசனத்தை நோக்கிய பாதையில் பயணிக்கும்.

# தமிழ்க் கட்சித் தலைவர்கள் ஒன்று கூடி "தமிழ்க் கட்சிகளின் ஒன்றியம்" உருவாக்கம்

இலங்கை தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் முக்கியஸ்தர்களும் நேற்று ஒன்றுகூடி தமிழ்க் கட்சிகளின் ஒன்றியம் உருவாகியுள்ளதுடன் தமிழ்மக்களின் இன்றைய அரசியல் நிலைவரம் தொடர்பாகவும் எதிர்கால வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளனர் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நேற்றுக் காலை கொழும்பில் இடம்பெற்ற மேற்படி சந்திப்பில் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் தமிழ்க் கட்சிகளுக்கிடையில் தமிழ் மக்களின் நலன்களுக்கான பொது வேலைத்திட்டத்தின் அவசியம் குறித்து ஆராயப்பட்டது. கடந்த மாதம் 24ம் திகதி தமிழ் அரசியல் கட்சிகளின் தல்லவர்களும் முக்கியஸ்தர்களும் ஒன்றுகூடி தமிழ் மக்களின் இன்றைய அரசியல் நிலைவரம் தொடர்பாகவும் எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் கூடி ஆராய்வதற்கென ஆரம்பித்த பொது இணக்கப்பாட்டின் தொடர்ச்சியாகவே இம் முக்கிய சந்திப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாமற்போன கட்சிகள் தொடர்பாகவும் மேலும் இணைந்துகொள்ளக்கூடிய கட்சிகள் தொடர்பாகவும் அக்கட்சிகளை இணைத்துக்கொள்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன் சமகாலத்தில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இதன் பிரகாரம் தமிழ்க் கட்சிகளின் ஒன்றியமாக, பொது நோக்கத்தின் அடிப்படையில் நோக்கங்கள் மற்றும் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதென்றும் அதற்கென ஓர் குழு அமைக்கப்பட்டு இதற்கான வரைபுகளை அக்குழுவானது எதிர்வரும் 4 ம் திகதி ஒன்று கூடி தயாரித்து எதிர்வரும் 7ம் திகதி மீண்டும் ஒன்று கூடவுள்ள தமிழ்க் கட்சிகளின் ஒன்றியத்திடம் கையளிப்பது எனவும் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. இக்குழுவில் ஆர்.சுரேந்திரன், ஆர் .ராகவன் ஏ.சி.கைலேஸ்வரன், தி.சிறிதரன், எம்.சந்திரகுமார், பேரின்பநாயகம், ரி.சிவாஜிலிங்கம், என்.குமரகுருபரன், ஷெரீன் சேவியர் ஆகியோர் அங்கத்தவர்களாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, தந்தை செல்வாவின் புதல் வரும் ஒவ்பர் அமைப்பின் இயக்குநருமாகிய செல்வநாயகம் சந்திரகாசன் மற்றும் பேரின்பநாயகம், நாபா ஈபிஆர்எல்எப் சார்பில் முன்னாள் வடக்குகிழக்கு மாகாண சபை முதல மைச்சர் வரதராஜப்பெருமாள், செயலாளர் தி.சிறிதரன் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், சதானந்தம் மற் றும் ஆர்.ராகவன், தமிழ்தேசிய விடுதலை முன்னணி சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம்,

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் சார்பில் அதன் செயலாளர் ஏ.சி.கைலேஸ்வரராஜா, கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பூ.பிரசாந்தன், சிறிரெலோ அமைப்பின் தலைவர் உதயன், ஜீ.சுரேந்திரன், ஜனநாயக மக்கள் முன்னணி செயலாளர் நல்லையா குமரகுருபரன், மனித உரிமை ஆர்வலர் செரீன் சேவியர் மற்றும் மேகலா, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் சந்திரகுமார் (அசோக்), பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), சர்வதேச அமைப்பாளர் மித்திரன் ஆகியோர் உட்பட பல முக்கியஸ்தர்களும் மேற்படி சந்திப்பில் கலந்துகொண்டனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

# பொலிஸாரின் நடமாடும் சேவை நாளை வேம்படியில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டு மக்களின் நன்மை கருதி யாழ் பொலிஸ் பிரிவினரால் நடமாடும் சேவை இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடத்தப்படவுள்ளது.

இச் சேவையில் வைத்திய வசதிகள் தேவைப்படுகின்றவர்களுக்கு இலவச வைத்திய பரிசோதனை செய்யப்பட்டு சிகிச்சை வழங்கப்படும். அத்துடன் கண்பார்வை குறைபாடு உடையவர்களுக்கு கண் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டுக் கண்ணாடி தேவைப்படுகின்றவர்களுக்கு இலவசமாகக் கண்ணாடிகளும் வழங்கப்படும்.

இதில் சுமார் 4 ஆயிரத்து ஐந்நூறு ரூபா பெறுமதியான இரண்டாயிரத்து 500 மூக்குக் கண்ணாடிககள் வழங்கப் படவுள்ளன. பாடசாலை மாணவ மாணவிகளுக்கு இலவச பற் பரிசோதனை நடத்தப்பட்டு பல்சுத்தம் செய்யப்படுதல் தமது தேசிய அடையாள அட்டைகளைத் தவறவிட்ட கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் பிரதேச மக்களுக்கு கிராம சேவகர் ஊடாக விவரங்கள் திரட்டப்பட்டு தேசிய அடையாள அட்டைகளை மீண்டும் வழங்கல், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாதவர்களுக்கு வழங்கல், வன்னியிலிருந்து இடம் பெயர்ந்தவர்களில் திருமணமாகியும் யுத்த சூழலால் சட்டபூர்வமாக விவாகப் பதிவுகளை மேற்கொள்ளுதல், தெரிவுசெய்யப் பட்ட 30குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்குதல் போன்ற சேவைகள் இடம்பெறும்.

இந்நடமாடும் சேவையில் யாழ் அரச அதிபர் க.கணேஷ் யாழ் போதனாவைத்தியசாலையின் பணிப்பாளர் ப.பவானி நல்லூர், கோப்பாய் மற்றும் யாழ்ப்பாண பிரதேச செயலர்கள் வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி அமரக்கோன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவின் பத்மதேவ , யாழ். பொலிஸ் அத்தியட்சகர் லக்ஸ்மன் விஜயரட்ண உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளார்கள். (ச–3, 5)

# வசந்தம் ரிவியில் நூல் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி குணசேகரத்தின் 62 புத்தகங்களின் அறிமுகமும் ஆக்க இலக்கிய கர்த்தாவின் பேட்டியும் வசந்தம் தொலைக்காட்சியில் இன்று காலை 10 மணிக்கும் எதிர்வரும் 6 ஆம் திகதி காலை11 மணிக்கும் ஒளிபரப்பாகும் என. அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளை நாளை காலை 9 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் ஒன்றுகூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு நாளை விஜயம் செய்யவுள்ள கல்வி அமைச்சரை நல்லூர் ஆலயச் சுழலில் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு தீர்மானித்துள்ளதால் அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் தவறாது ஒன்றுகூடுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (ச)

# கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிசனின் நிதியுதவியில் கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மானிப்பாய் வீதி தாவடியிலுள்ள சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினராக தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர் ச.சண்முககுலகுமாரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து தாவடி இ.த.க. பாடசாலையில் கல்வி கற்கும் 40 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் யாழ்.பல்கலைக்கழகத்தை சேர்ந்த மாணவர்கள் 24 பேருக்கு நிதியுதவியும் வழங்கப்படவுள்ளது.(ச–3)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### வாழ்க்கை



நீங்கள் இறைவனை உணர்ந்தால் உங்கள் முகம் மாறிவிடும்,உங்கள் குரல் மாறிவிடும்,உங்கள் தோற்றமே மாறிவிடும்.நீங்கள் மனித குலத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக இருப்பீர்கள்.

நீங்கள் ஆன்மீக வாழ்க்கையை விரும்பினால், நிறுவப்பெற்ற,நிலைபெற்று விட்ட எந்த மதத்தையும் பின்பற்றாதீர்கள்.அந்த மதங்கள், ஒவ்வொருவரின் தனி வளர்ச்சியைத் தடைப்படுத்துவதால், நன்மை செய்வதை விட நூறு மடங்கு தீமை செய்கின்றன. எல்லாவற்றையும் ஆராய்ந்து பாருங்கள்.ஆனால் உங்கள் கருத்தில் உறுதியாக இருங்கள்.

பிரார்த்தனையால் நுண்ணிய ஆற்றல்கள் எளிதாக விழிப்படைகின்றன.தன்னுணர்வுடன் பிரார்த்தனை செய்தால் எல்லா விருப்பங்களும் நிறைவேறும். உணர்வற்ற நிலையில் செய்தால் ஒருவேளை பத்தில் ஒன்று நிறைவேறலாம்.அத்தகைய பிரார்த்தனை சுயநலமானது, அதனை விட்டுவிட வேண்டும்.

## புதிய குடியேற்ற சட்டத்தின் எதிரொலி

# ஆஸியிலிருந்து 15 ஆயிரம் இந்திய மாணவர்கள் தாயகம் திரும்பும் நிலை

(புதுடில்லி)

அவுஸ்திரேலியாவுக்கு குடியேறும் வெளிநாட்டவர் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கில் புதிய குடியேற்றச் சட்டத்தை அந்நாட்டு அரசு நேற்று முன்தினம் முதல் அமுல்படுத்தியுள்ளது.

இந்த சட்டத்தின் பாதிப்பாக அங்கிருந்து சுமார் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் இந்திய மாணவர்கள் தாயகம் திரும்பும் நிலை ஏற்படக்கூடும் என வெளிநாடு வாழ் விவகாரத் துறை அமைச்சர் வயலார் ரவி நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பாக வயலார் ரவி கூறுகையில், வெளிநாடுகளிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு குடியேறும் தொழிலாளர்களை குறைக்கும் நோக்கத்தில் புதிய குடியேற்றச்சட்டத்தை அவுஸ்திரேலிய அரசு அமுல்படுத்தியுள்ளது. ரூட் தலைமையிலான அரசு இந்த சட்டத்தை கொண்டுவந்தது.

இதன்படி திறன்சார் தொழில்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ள தொழில்கள் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது. முன்னதாக இந்த தொழில்கள் எண்ணிக்கை 450 ஆக இருந்தது. தற்போது அது 150 ஆக குறைந்துள்ளது. இந்த பட்டியலில் உள்ள தொழில்கள் சார்ந்த படிப்புகளை தேர்ந்தெடுத்து படிக்க அவுஸ்திரேலியா செல்லும் வெளிநாட்டு மாணவர்கள் படிப்பு முடிந்ததும் நிரந்தர குடியுரிமை பெறுவதுடன் வேலையும் பெற்று வந்தனர்.

தற்போது அந்த பட்டியலிலிருந்து முடித்திருந்தும் தொழில், சமையல்கலை உள்ளிட்டவை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளன. அவுஸ்திரேலியா சென்று நிரந்தரக் குடியுரிமை பெறும் நோக்கத்தில் ஏராளமான இந்திய மாணவர்கள் இத்தகைய படிப்புகளில் சேர்ந்து பயில்கின்றனர். இனி நிலைமை மாறிவிடும்.

புதிய குடியேற்றச் சட்டத்தின் காரணமாக இந்திய மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பது நிச்சயம். சுமார் 30 ஆயிரம் மாணவர்கள் பாதிப்புக்குள்ளாவார்கள். 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் மாணர்கள் வரை தாயகம் திரும்பக்கூடும் என்று தெரிவித்துள்ளார். (6-4)

# அமெரிக்க பொருளாதார வளர்ச்சி மந்தகதியில் செல்கிறது



## ஒபாமா தெரிவிப்பு

அமெரிக்க பொருளாதார வளர்ச்சி சரியான திசையில் தான் சென்று கொண்டிருக்கிறது. ஆனால் விரைவாக இல்லை என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், இன்று நமது பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. ஆனால் அது வேகமானதாக இல்லை. சரியான பாதையில் தான் போய்க் கொண்டிருக்கிறோம். ஆனால் வேகம் போதாது. நமது தனியார் துறையினர் மீண்டும் நிறைய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி வருகின்றனர். எனவே நாம் வளர்ச்சிப் பாதையில் இருக்கிறோம் என்பதில் சந்தேகம் இல்லை என்றார். (6)


# மைக்கல் ஜக்சனின் மகனுக்கும் தோல் வெளுப்பு நோய் பாதிப்பு

(லண்டன்)

மறைந்த பொப்பிசைப் பாடகர் மைக்கேல் ஜக்சனின் மகனுக்கும் தோல் வெளுப்பு நோய் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு காலமான பொப் இசை பாடகர் மைக்கேல் ஜக்சனுக்கு தோல் நோய் இருந்தது. முகம் மற்றும் உடல் வெளுத்த நிலையில் ஜக்சன் காணப்பட்டார். கறுப்பினத்தைச் சேர்ந்த ஜக்சன் பிளீச்சிங் மூலம் தன் உடலை சிவப்பு நிறமாக்கிக் கொண்டார் எனக் கூறப்பட்டது.

ஆனால் அவருக்கு விலிடிகோ என்ற தோல் நோய் இருந்து. ஒரு கால கட்டத்தில் சிகிச்சை பெற்று வந்தார்.

தற்போது இவரது மூத்த மகன் பிரின்ஸ் மைக்கேலும் இந்த நோயால் பாதிப்புற்றுள்ளார் எனத் தெரியவந்தது. மைக்கேல் ஜக்சனுடன் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 1999 ஆம் ஆண்டு வரை வாழ்ந்த டெபி ரோ என்ற பெண்ணுக்கு பிறந்த மகன் தான்



பிரின்ஸ் மைக்கேல் ஆவார். தற்போது 13 வயதாகும் பிரின்சுக்கு, கைகளில் தோல் வெளுக்க ஆரம்பித்துள்ளது.

மைக்கேல் ஜக்சன் இறந்த பின் அவரைப் பற்றி பல வதந்திகள் கிளம்பின. மைக்கல் பிரின்சுக்கு ஏற்பட்டுள்ள தோல் நோய் பாரம்பரியமானது என்பதால் பிரின்ஸ் , ஜக்சனுக்கு பிறந்த மகன் தான் என்பது தற்போது உறுதியாகியுள்ளது. (6)

# ஜேர்மனின் புதிய ஜனாதிபதியாக உல்ப் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்

(பேர்லின்)

ஜேர்மனியின் ஜனாதிபதியாக ஹார்ஸ்ட் கோஹலர் கடந்த 2004 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டார். இவர் கடந்த மே மாதம் 31 ஆம் திகதி தன் பதவியை திடீர் என்று இராஜினமா செய்து விட்டார்.

இதை தொடர்ந்து புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக தேர்தல் நடந்தது. இதில் கட்சிக்குள் போட்டியாளராக கருதப்படும் கிறிஸ்டியன் உல்ப் என்பவரை பிரதமர் மார்க்கெல் நிறுத்தினார். இவர் 3 ஆவது சுற்று நடந்த தேர்தலில் வெற்றி பெற்றார்.

தேர்தலில் அறுதிப்பெரும்பான்மை பெற ஒருவர் 623 வாக்குகள் பெற வேண்டும். முதல் சுற்று வாக்குகளில் உல்ப்புக்கு 2 டஜன் வாக்குகள் குறைவாக கிடைத்தன. 2 ஆவது சுற்றிலும் பெருபான்மை கிடைக்கவில்லை. 3 ஆவது சுற்றில் இவருக்கு 625 வாக்குகள் கிடைத்தன.

இந்த நாட்டின் மிக இளம்வயது ஜனாதிபதி உல்ப் தான் என்று கூறப்படுகிறது. இவருக்கு வயது 51 ஆகும். (6)

# விமான நிலைய ஸ்கானர் கருவிகளால் கதிரியக்க பாதிப்பு

## அமெரிக்க விஞ்ஞானி தெரிவிப்பு

(லண்டன்)

விமான நிலையங்களில் முழு உடல் பரிசோதனை ஸ்கானர்களை பயன்படுத்தினால் பயணிகளுக்கு புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புகள் அதிகரிக்கும் என்று அமெரிக்க விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

இது குறித்து கொலம்பியா பல்கலைக்கழகத்தின் கதிரியக்கவியல் ஆராய்ச்சி மையத் தலைவர் டேவிட் பிரென்னர் கூறியவை வருமாறு,

விமான நிலையங்களில் பயன்படுத்தப்படவுள்ள முழு உடல் பரிசோதனை ஸ்கானிங் கருவிகளிலிருந்து வெளியேறும் எக்ஸ் – ரே கதிர்கள் உடலுக்கு தீமை விளைவிக்கக் கூடியது. சாதாரண கருவிகளை விட இந்த வகை ஸ்கானர்கள் 20 மடங்கு கதிரியக்கத்தை வெளிப்படுத்தக் கூடியன.

குறிப்பாக குழந்தைகள் இந்த கதிரியக்கத்தால் அதிகம் பாதிக்கப்படுவர். ஸ்கானர்களில் இருந்து வெளிப்படும் கதிரியக்கம் காரணமாக தோல் புற்றுநோய் ஏற்பட அதிகம் வாய்ப்புள்ளது.

எனவே இது போன்ற முழு உடல் பரிசோதனை ஸ்கானர்களை பயன்படுத்துவதற்கு முன்பு அதனால் ஏற்படும் விளைவுகளை ஆராய்ந்து அதற்கேற்ப கருவியை வடிவமைப்பது நல்லது என்று டேவிட் குறிப்பிட்டுள்ளார்.

தீவிரவாத அச்சுறுத்தல் காரணமாக விமான நிலைய பாதுகாப்பு ஏற்பாடுகளில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்த உலக நாடுகள் முயற்சி செய்து வரும் வேளையில் பிரென்னரின் இந்த கருத்து முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. (6)




# ஆப்கானிஸ்தான் இராணுவ அதிகாரிகளுக்கு பாகிஸ்தானில் பயிற்சி

(வேஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் உள்ள இராணுவ அதிகாரிகளுக்கு பாகிஸ்தான் பயிற்சி வழங்கவுள்ளது. இதற்கு ஆப்கானிஸ்தான் அதிபர் கர்சாய் சம்மதம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே ஒரு உடன்பாடு ஏற்பட்டுள்ளது. சமீபத்தில் இரு நாடுகளின் உயர் மட்ட தலைவர்கள் இடையே பேச்சு வார்த்தையையடுத்தது இது தொடர்பாக ஒப்பந்தம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தம் பாகிஸ்தானுக்கு கிடைத்த வெற்றியாக கருதப்படுவதாக குறிப்பிடப்படுகிறது. ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் பாகிஸ்தானுக்கு பெரும் பங்கு வேண்டும் என்று பாகிஸ்தான் கோரி வந்தமை குறிப்பிடத்தக்கது பாகிஸ்தானில் பயிற்சி பெற சில டசின் அதிகாரிகள் மட்டுமே அனுப்பப்படுவார்கள் என்ற போதிலும் அது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (6)

# பாகிஸ்தானில் மதவழிபாட்டுத் தலமொன்றில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் 35 பேர் பலி

(லாகூர்)

பாகிஸ்தான் மத வழிபாட்டுத் தலமொன்றில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் பலர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானில் லாகூர் நகரில் இந்தக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகவும் இதில் 35 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 175 பேர் காயமடைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

குறித்த மத வழிபாட்டுத் தலத்திற்கு ஆயிரக் கணக்கானோர் சென்றிருந்த வேளையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனவும் தொழுகை செய்யும் மற்றும் ஓய்வெடுக்கும் இடங்கள் மீது தற்கொலைக் குண்டுதாரிகள் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு இது வரையில் எந்தவொரு அமைப்பும் உரிமை கோரவில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது. சுனி மற்றும் ஷியா ஆகிய இரண்டு இன முஸ்லிம்களும் குறித்த வழிபாட்டுத் தலத்திற்கு யாத்திரை செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. (6)



கனடா, ஒட்டாவா நகருக்கு விஜயம் மேற்கொண்ட இரண்டாம் எலிசெபத் மகாராணியை அந்நாட்டு ஜனாதிபதி ஸ்டீபன் ஹார்பர் ரிடியு மாளிகையில் வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# மத்திய வங்கியின் மாகாண அலுவலகம்

# யாழ்ப்பாணத்தில் நாளை திறந்து வைப்பு

இலங்கை மத்திய வங்கி அதன் நான்காவது மாகாண அலுவலகத்தினை 2010 யூலை 4ஆம் நாளன்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கிறது. பல தசாப்தங்களாக நிலவிய மோதல்கள் முடிவடைந்ததனைத் தொடர்ந்து கடந்த ஓராண்டு காலப்பகுதியில் வர்த்தக வங்கிகள், நிதியியல் கம்பனிகள்,குத்தகைக்குவிடும் கம்பனிகள் உள்ளிட்ட பல்வேறு நிதியியல் நிறுவனங்கள் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் தமது கிளைகளைத் திறந்திருக்கின்றன. இலங்கை மத்திய வங்கி இலங்கையின் வட மாகாண மக்களின் நிதியியல் தேவைகளை ஈடுசெய்யும் பொருட்டு, வட மாகாணத்திற்கு செல்வதற்கு அத்தகைய நிறுவனங்களை ஊக்குவித்தது. வட மாகாணத்தின் அபிவிருத்தி அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் உயர்ந்த முன்னுரிமையைப் பெற்ற விடயமாக இருப்பதுடன் இம் மாகாணத்தின் முழு அபிவிருத்திக்குமாக 'வடக்கின் வசந்தம்' என்ற பெயரின் கீழ் சிறப்பு நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் கொள்கை நிகழ்ச்சி நிரலுக்கேற்ப, மோதல் ஒன்றிற்குப் பின்னர் பொருளாதார வாழ்க்கையையும் மக்களின் நம்பிக்கையையும் மீள தொடங்குவதற்கான அபிவிருத்தி நிதியின் பாய்ச்சலைத் தூண்டும் விதத்தில் யாழ்ப்பாணத்தில் மாகாண அலுவலகமொன்றினை நிறுவுவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்தது.

வட மாகாணம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கியிருக்கிறது. இதன் பரப்பு ஏறத்தாழ 8,900 சதுர கிலோ மீற்றர்களாக அமைந்து நாட்டின் மொத்த நிலப்பரப்பில் ஏறத்தாழ 14 சதவீதத்தினை உள்ளடக்கியிருக்கிறது. 2007ஆம் ஆண்டில் மாகாணத்தின் மதிப்பிடப்பட்ட குடித்தொகை ஏறத்தாழ 1.2 மில்லியன் அல்லது நாட்டின் மொத்த சனத்தொகையில் 5.8 சதவீதமாகக் காணப்பட்டது.

காடுகள், வேளாண்மை நிலங்கள், மண், நீர்த்தேக்கங்கள், ஈரலிப்பு நிலம், கடல் நீரேரிகள், குடாக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பல்வேறு அமைவிடங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய இயற்கை மூலவளங்கள் நிரம்பிய இயற்கையின் கொடைகளைக் கருத்திற் கொள்கையில் வட மாகாணத்தின் அபிவிருத்திக்கான உள்ளார்ந்த வளங்கள் எண்ணிறந்தனவாகும். மோதல்களுக்கு முன்னர் வட மாகாணத்தின் பொருளாதார செயற்பாடுகள் மூன்று முக்கிய துறைகளான வேளாண்மை, மீன்பிடி மற்றும் சிறு கைத்தொழில் என்பனவற்றைச் சுற்றி மையம் கொண்டிருந்தன. இரணைமடுக் குளம் கட்டுக்கரைக் குளம், வவுனிக் குளம் மற்றும் பல நடுத்தர அளவு நீர்ப்பாசனத் திட்டங்கள் இம் மாகாணத்தின் பரந்தளவிலான நெற் செய்கைக்கும் ஏனைய பயிர்களின் பயிர்ச் செய்கைக்கும் வசதியளித்தன. மேலும், வளம் நிறைந்த செம்மண் நிலம் குறுங்கால மற்றும் நீண்டகாலச் காசுப்பயிர்களின் பயிர்ச்செய்கைக்கு மிக உகந்ததாகக் காணப்படுகிறது. உற்பத்திப் புள்ளிவிபரங்களின்படி 1980 களின் தொடக்கப்பகுதியில் வட மாகாணம் நெல் உற்பத்தியில் 35 சதவீதத்திற்கும் சின்ன வெங்காய உற்பத்தியில் 45 சதவீதத்திற்கும் மீன் உற்பத்தியில் 40 சதவீதத்திற்கும் வகை கூறியது. மேலும் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளும் வெற்றிகரமாகத் தொழிற்பட்டன. இன்றும் கூட வேளாண்மை விலங்குவளர்ப்பு மற்றும் மீன்பிடி என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டும், இப் பிரதேசத்தில் கிடைக்கின்ற சுண்ணாம்புக்கல், சிலிக்கா மணல் மற்றும் கனிமப் படிவுகள் போன்ற மூலப்பொருட்களைப் பயன்படுத்தியும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்கு பெருமளவு உயர்ந்த வளங்கள் கிடைக்கத்தக்கதாகவுள்ளன.

உற்பத்தியாக்கத்துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வதனூடாக வட மாகாணத்தின் பொருளாதாரத்தினை வசதிப்படுத்துவதற்கு மத்திய வங்கி ஏற்கனவே பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. உள்நாட்டு மோதல்கள் முடிவடைந்ததன் பின்னர் வர்த்தக வங்கிகளின் 43 புதிய கிளைகளையும் 47 விரிவாக்கல் அலுவலகங்களையும் திறப்பதற்கு ஒப்புதல்களை வழங்கியதன் மூலம் மாகாணத்தில் வர்த்தக வங்கிக் கிளைகளின் வலையமைப்பின் விரிவாக்கம் விரைவுபடுத்தப்பட்டது. மேலும், வட மாகாணத்திலுள்ள சாத்தியமான வாய்ப்புக்களைக் கொண்ட தொழில் முயற்சியாளர்களுக்கு பிரத்தியேகமாக கொடுகடன் வசதிகளை வழங்குவதற்கான "வடக்கின் எழுச்சி" என்ற சிறப்பு மீள் நிதியிடல் கடன் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு மத்திய வங்கி நடவடிக்கைகளை எடுத்திருந்தது. இன்று வரை, இத் திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 13,266 கடன் விண்ணப்பங்கள் பதிவு செய்வதற்காக வங்கிகளினால் பெறப்பட்டுள்ளதுடன் இதில் ரூ.1,148 மில்லியன் தொகை கொண்ட 8,410 கடன்கள் பல்வேறு வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்காக ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றன. மேலும் வட மாகாண மக்கள் இப் பிராந்தியத்தில் மத்திய வங்கியினால் ஏற்கனவே நடைமுறைக்கிடப்பட்டு வரும் பல்வேறு கடன்திட்டங்களின் கீழ் ஏதேனும் ஆற்றல் வாய்ந்த வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்காக சலுகை வட்டி வீதங்களில் நிதியியல் உதவிகளைப் பெறக்கூடியவர்களாக இருக்கின்றனர். எடுத்துக்காட்டாக, மத்திய வங்கியினால் நடைமுறைக்கிடப்பட்ட வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியியல் செயற்றிட்டத்தின் கீழ் வட மாகாணத்திலுள்ள 17,000 குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை இத் திட்டம் அடைந்ததுள்ளதுடன் இதில் 4,300 குடும்பங்கள் கடந்த ஒன்பது மாதங்களில் புதிதாக வருமான உருவாக்க நடவடிக்கைகளைக் தொடங்குவதற்காக அல்லது ஏற்கனவேயுள்ள வருமான உருவாக்க நடவடிக்கைகளை விரிவாக்குவதற்காக சிறியளவு கடன்களைப் பெற்றுள்ளன.

வட பிராந்திய மக்களின் நிதியியல் துறைப் பணிகளுக்கான அதிகரித்த கேள்வியை கருத்திற் கொண்டு மத்திய வங்கி, நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 7இன் கீழ் நாணயச் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில் வட மாகாணத்திற்காக மத்திய வங்கியின் மாகாண அலுவலகத்தினை நிறுவுவதற்கு தீர்மானித்தது.

மாகாண அலுவலகத்தின் முக்கிய பணியாக வட பிராந்தியத்தின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவது விளங்கும். இந் நோக்கத்திற்காக, கிடைக்கத்தக்கதாக இருக்கும் கொடுகடன் வசதிகள் பற்றி சாத்தியமான வாய்ப்புக்களைக் கொண்ட முதலீட்டாளர்களுக்கு மாகாண அலுவலகம் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தவுள்ளதுடன், தொடர்பான அமைப்புக்களின் இணைப்புடன் வருமான உருவாக்க நடவடிக்கைகளைத் தொடங்குவதற்குத் தேவையான தேர்ச்சிகளை அவர்கள் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகளையும் மேற்கொள்ளும். மாகாண அலுவலகம் சமூக பொருளாதார அந்தஸ்தினை, குறிப்பாக இப் பிராந்தியத்திலுள்ள மக்களின் வறுமை மட்டத்தினை மதிப்பீடு செய்வதுடன், இம் மாகாணத்திலுள்ள மக்களின் சுபீட்சத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைப்பதில் கொள்கை வகுப்பதற்கு உதவக்கூடிய தரவுகளைத் திரட்டிக் கொள்ளும். புதிய மாகாண அலுவலகம் திறக்கப்படுவதுடன் மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திலுள்ள மற்றைய திணைக்களங்களினால் வழங்கப்படும் பணிகள் பலவும், குறிப்பாக, ஊ.சே. நிதியத் திணைக்களத்தின் பணிகள் வட மாகாணத்திலுள்ள மக்களுக்கு அவர்களின் வாசல் படிகளில் கிடைக்கச் செய்யப்படும். புதிய மாகாண அலுவலகம் வங்கித்தொழில், நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தியுடன் தொடர்பான பரந்த விடயங்களில் ஆய்வரங்குகளை நடத்துவதன் மூலமும் இலங்கை மத்திய வங்கியின் வெளியீடுகளை விற்பனை செய்வதன் மூலமும் பிராந்தியத்தில் அறிவினைப் பரப்பும் நிலையமொன்றாகச் செயற்படும்.

தொடர்பான ஏனைய அமைப்புக்கள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் நடவடிக்கைகள், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு மாகாணத்தின் பங்களிப்பினை குறிப்பிடத்தக்களவிற்கு உயர்த்தும் விதத்தில் வடபகுதி மக்களுக்கு உதவக் கூடியதாக இருக்க வேணடு ம் என மத்திய வங்கி வாழ்த்துகிறது.

**வட மாகாணத்தில் மாகாண**

**சமூக-பொருளாதார அளவீடு**

மாகாண அலுவலகம் திறந்து வைப்பதற்கு இணையாக வங்கி வடமாகாணத்தில் சமூக பொருளாதார

நிலைமைகளை மதிப்பிடுவதற்கு அளவீடொன்றை நடத்தும். ஆரம்ப கட்டமாக, வட மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்கள் இவ் அளவீட்டில் உள்ளடக்கப்படும்.

மத்திய வங்கி மற்றும் தொகைமதிப்பு புள்ளி விபரத் திணைக்களம் ஆகிய இரண்டும் நாட்டில் கிரமமாக

அளவீடுகளை நடத்துகிறபோதிலும் நடைபெற்ற போர் நிலைமை காரணமாக அண்மைக் காலத்தில் இவ்வளவீடுகளில் வடமாகாணத்தை முழுமையாக உள்ளடக்குவது சாத்தியமாக இருக்கவில்லை. இதன் காரணமாக அபிவிருத்தித் திட்டமிடலில் பயன்பாட்டிற்கான ஆகப் பிந்திய தகவல் போதுமற்றதாக இருந்தது. இம்மாதிரி அளவீட்டை நடத்துவதன் பிரதான குறிக்கோள் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் நகர மற்றும் கிராமியத்துறைகளிலிருந்து எடுக்கப்பட்ட 1,000 வீட்டலகுகள் கொண்ட மாதிரியிலிருந்து குடித்தொகைப் பண்புகள், வாழக்கைத் தரங்கள், வருமான மட்டங்கள், தொழில்சந்தை நிலைமை, தொழில் அபிலாசைகள் கடன்படல் மற்றும் சேமிப்பு நடத்தை தொடர்பான ஒருங்கிணைந்த தகவலைப் பெறுவதாகும்.

இத்தரவு, வீட்டலகு உறுப்பினர்களை நேர்காணல் மூலம் ஒழுங்கமைக்கப் பட்ட வினாக் கொத்தினூடாக தெரிந்தெடுக்கப்பட்ட குடும்ப அலகுகளிடமிருந்து சேகரிக்கப்படும். வீட்டலகுத் தலைவர் அல்லது பொறுப்பு வாய்ந்த எந்தவொரு வயதுவந்த உறுப்பினிரின் பிரசன்னம் அக் குடும்ப அலகுக்கான பூரணமானதும், சரியானதுமான புள்ளி விபரத் தகவலைப் பெறுவதற்கு அத்தியாவசியமாகும். தெரிந்தெடுக் கப்பட்ட வீட்டலகுக்கு கள அலுவலர் களின் வருகை அவர்களது கிராம சேவையாளர்களூடாக அறிவிக் கப்படும். இவ்வளவீட்டில் சேகரிக்கப்பட்ட தனிப்பட்ட வீட்டலகுத் தகவல்கள் மிகவும் இரகசியமாகப் பேணப்படும் என்பதுடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு தனி நபருக்கோ அல்லது நிறுவனத்துக்கோ வெளிப்படுத்தப்படாது.

தரவு சேகரிக்கும் அளவீடு யாழ்ப் பாணத்தில் 2010 யூலை முதல் வாரத்தில் ஆரம்பமாகி 2010 ஓகத்து வரை தொடர்ந்து நடைபெறும்.

இச் செயல்முறையின் தேசிய முக்கியத்துவத்தைக் கவனத்திற் கொண்டு குறிப்பாக தெரிந் தெடுக்கப்பட்ட வீட்டலகு மாதிரி உறுப்பினர்கள் உள்ளிட்ட யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களின் குடிமக்கள் அவர் களது பெறுமதிமிக்க நேரத்தை ஒதுக்கியும் கள அலுவலர்களுக்குத் தேவையான தகவலை வழங்கியும் இவ் அளவீட்டுக்கு தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு இலங்கை மத்திய வங்கி தயவுடன் கேட்டுக்கொள்கிறது.

**வட மாகாணத்தின் பொருளாதார**

**அபிவித்திக்கான வங்கித்தொழில்**

**வசதிகள்**

கடந்த அண்மைக் காலத்தில், வட மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தியைத் தூண்டும் பல்வேறு சிறப்புக் கொடுகடன் திட்டங்கள் இலங்கை அரசாங்கத்தின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டன. அபிவிருத்திக் கொடுகடன் திட்டங்களின் நோக்கம் யாதெனில் வேளாண்மை, விலங்குவளர்ப்பு, மீன்பிடி, நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கான மூலதன முதலீட்டினை ஊக்குவிப்பதேயாகும். அபிவிருத்திக் கொடுகடன் வசதியூடான நிதியியல் தலையீடு இலங்கையின் வட மாகாணத்திலுள்ள மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியினை உத்வேகப்படுத்தும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினூடாக நடைமுறைப்படுத்தப்படும் கொடுகடன் திட்டங்கள் மத்திய வங்கியினால் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட னவாகும்.

வட மாகாணத்தில் தொழிற்பட்டு வருகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் கொடுகடன் வசதிகள், மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளின் அபிவிருத்தி மற்றும் வருமான உருவாக்க நடவடிக்கை களுக்கான அவர்களின் முதலீட்டு தேவைகளை ஈடுசெய்வதற்காக மாகாணத்தில் தொழிற்படும் ஏதேனும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து கிடைக்கச் செய்யப்படும். இதற்கமைய, அவர்கள் புதிய வருமான உருவாக்க நடவடிக்கை களைத் தொடங்குவதற்காக அல்லது அவர்களது ஏற்கனவேயுள்ள அவர்களது வருமான உருவாக்க நடவடிக்கைகளை விரிவாக்குவதற்காக இவ் வசதிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

தற்பொழுது, இலங்கை அரசாங்கத்தின் உதவியுடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினூடாக வட மாகாணத்தில் ஐந்து முக்கியமான அபிவிருத்தி கொடுகடன் திட்டங்கள் தொழிற்படுத்தப்பட்டு வருகின்றன.

தகவல் தொடர்பாடல் பிரிவு,
இலங்கை மத்திய வங்கி.

# உலகக்கிண்ண கால் பந்தாட்டத்தில் அதிர்ச்சி பிரேசில் அவுட் ; நெதர்லாந்து அரையிறுதியில்

(போர்ட் எலிசபெத்)

உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் ரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சி. பரபரப்பான காலிறுதிப் போட்டியில் 5 முறை உலக சம்பியனான பிரேசில் அணி 1-2 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்து அணியிடம் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியது.

பிலிப் மெலோ சேம் -சைட் கோல் அடித்து பிரேசில் அணியின் சம்பியன் கனவைத் தகர்த்தார். அபார வெற்றி பெற்ற நெதர்லாந்து அணி நான்காவது முறையாக அரையிறுதிக்கு முன்னேறியது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் 19-வது உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் நேற்று போர்ட்எலிசபெத்தில் நடந்த முதலாவது காலிறுதிப் போட்டியில் உலகின் நம்பர் -1 அணியான பிரேசில், நெதர்லாந்து அணியை சந்தித்தது.

ஆட்டம் ஆரம்பமாகி 8-வது நிமிடத்தில் பிரேசில் வீரர் ரொபினியோ பந்தை கோல் கம்பங்களுக்குள் அடித்தார்.

ஆனால் இது ஓப் சைட் கோலாக நடுவரால் அறிவிக்கப்பட்டது. எனினும் பிரேசில் வீரர்கள் மனம் தளர வில்லை.

அடுத்த இரண்டாவது நிமிடத்தில் தனக்கு கிடைத்த வாய்ப்பைத் தவறவிடாமல் ரொபியானோ சுப்பர் கோல் அடிக்க பிரேசில் அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இதற்கு பதிலடி கொடுப்பதற்கு நெதர்லாந்து வீரர்கள் ஆரோக்ஷமான ஆட்டத்தில் ஈடுபட்டனர்.ஹெட்டிங்கர் வான்டர்வெய்ல் ஆகியோருக்கு நடுவர் மஞ்சள் அட்டை காண்பித்து எச்சரித்தார்.

இந்நிலையில் முதல்பாதி ஆட்ட முடிபில் பிரேசில் அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

**சேம் சைட் கோல்**

இரண்டாவது பாதி ஆட்டத்தில் நெதர்லாந்து அணி வீரர்கள் எழுச்சி பெற்றனர். போட்டியின் 53ஆவது நிமிடத்தில் நெதர்லாந்து வீரர் அர்ஜென் ராபென் அடித்த பந்தை பெற்ற ஸ்னைடர் கோல் கம்பத்தை நோக்கி அடித்தார்.ஆனால் பிரேசில் கோல் காப்பாளர் ஜுலியோ சீஸர் பந்தைப் பிடிக்கத் தவறினார். மாறாக பிலிப் மேலோசின் தலையில் பட்டு சேம் சைட் கோலாக மாறியது.

இதனால் நெதர்லாந்து அணிக்கு ஒரு கோல் கிடைக்க ஆட்டம் 1-1 என சமநிலையானது.

**நெதர்லாந்து முன்னிலை**

தொடர்ந்து அசத்திய நெதர்லாந்து அணிக்கு 68ஆவது நிமிடத்தில் கோர்னர் கிக் வாய்ப்புக் கிடைத்தது.இதை அர்ஜென் ராபென் பிரேசில் கோல் பகுதிக்குள் அடித்தார்.

அங்கிருந்த குயிட் தலையால் முட்ட தொடர்ந்து அருகில் வந்த ஸ்னைடர் தலையால் முட்டி கோலாக மாற்றினார்.

இதன்மூலம் நெதர்லாந்து அணி 2-1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில் 73ஆவது நிமிடத்தில் நெதர்லாந்து வீரர் ஸ்னைடரை சேம் சைட் கோல் அடித்த பிலிப் மெலோ கீழே தள்ளி விட்டு மிதித்தார்.

இதையடுத்து பிலிப் மெலோ வை நடுவர் சிவப்பு அட்டை காண்பித்து வெளியேற்றினார்.

இதனால் பிரேசில் அணி 10 வீரர்களுடன் போராடவேண்டியதாயிற்று. போட்டியை சமநிலை செய்ய பிரேசில் வீரர்கள் எடுத்த முயற்சிகள் வீணானது.

இறுதியில் நெதர்லாந்து அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

பிரேசில் அணி சோகத்துடன் தொடரிலிருந்து விடைபெற்றது.

## மயோன்...

முஸம்மலிற்கு, மயோன் முஸ்தபா 42 இலட்சம் ரூபாய் இலஞ்சமாக வழங்கியுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்று குறித்த விடயம் தொடர்பாக கல்கிசை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போது மயோன் முஸ்தபா நீதிமன்றில் ஆஜராகாதமையால் கல்கிசை நீதிமன்றம் பிடிவிறாந்து ஆணை பிறப்பித்துள்ளது. இருப்பினும்முன்னாள் அமைச்சர்மயோன் முஸ்தபா தற்போது வெளிநாடு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## அவையில்...

முறையில் சபாநாயகர் எடுத்த தீர்மானம் பாராட்டுக்குரியதென எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். .

ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்கு பொருத்தமற்ற வசனங்களை பயன்படுத்தக் கூடாது என சபாநாயகர் எச்சரித்துள்ளார். (ச-5)

## ஜனாதிபதித் தேர்தலில் போட்...

தன்வசம் வைத்திருக்க மகிந்த ராஜபக்ஷ முயற்சிப்பதாக அரசாங்கத் தின் முக்கிய அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் அந்த பதவியில் அமர்ந்தால் அரசியல் யாப்பு ரீதியான சர்வதிகார நிலைமை உருவாகும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதியாக பதவிவகித்த ஒருவர்பல தடவைகள் அந்தபதவிக்காக தேர்தலில் போட்டியிடக் கூடிய வகையில் அரசியல் அமைப்பில் மாற்றங்கள் கொண்டுவரப்படுமாயின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம் என சட்ட வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசியல் சாசனத்தில் மாற்றங்கள் செய்யப்படுமாயின் தற்போதைய ஜனாதிபதிக்கு மாத்திரமல்ல முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் தேர்தலில் போட்டியிட அரசியல் சாசன ரீதியாக அனுமதி கிடைக்கும் என அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ச-5)

## யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு...

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

கௌரவ சபாநாயகர் அவர்களே!

வன்னியில் பிடிபட்டுள்ளவர்கள் ஒன்றும் கிரிமினல் குற்றவாளிகள் அல்லர். இந்தநாட்டில் மாறிமாறி வந்த அரசாங்கங்கள் தமிழ் இனத்தின் மீது ஏற்படுத்திய துவேசம்தான் இந்நிலையைத் தோற்றுவித்தது.

எனவே அதற்கு இன்றைய அரசாங்கமும் பொறுப்பேற்று அவர்கள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்ய வேண்டும். இது ஒன்றும் இந்த நாட்டில் புதிதல்ல. இப்படி ஒரு சம்பவம் ஏற்கனவே ஜே.வி.பினருக்கு நடந்திருக்கிறது. அதனைப் போன்றே தமிழ் கைதிகளையும் விடுவிக்க இந்த அரசாங்கம் முன்வரவேண்டும்.

முக்கிய புலி உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் அவர்களுக்கு ஆதரவு வழங்கினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் எத்தகைய வழக்கும் இன்றி விசாரணையும் இன்றி பல ஆண்டுகளாக இந்த நாட்டின் சிறைகளில் சிறைவாசம் அனுபவிக்கின்றனர். இவர்கள் அனைவருமே விடுவிக்கப்படவேண்டும்.

இலட்சக்கணக்கான வீடுகள் அடையாளம் தெரியாமல் சிதைக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட வடக்குக் கிழக்கில் வாழும் அனைத்து மக்களுமே மனஉளைச்சலுடன் தமது வாழ்க்கையை தொடர்கின்றனர்.

வன்னிப் பிரதேசத்தில் பொதுமக்களின் காணிகளை பாதுகாப்புத்துறையினர் தங்களது தேவைக்காக எடுத்துக்கொள்ளப்போ கின்றனர் என்ற தமது அச்சத்தை ஜனாதிபதி உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகிய அனைவரிடமும் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதுகுறித்து ஜனாதிபதியுடன் நடந்த சந்திப்பிலும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி கூட்டத்திலும் நாங்கள் பேசியும் இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை.

இறுதிக்கட்ட யுத்தத்தில் கொல்லப்பட்ட அனைத்து தமிழ் மக்களுக்கும் நட்டஈடு வழங்கப்பட வேண்டும். யுத்தத்தில் உடல் உறுப்புக்களை இழந்த அனைவருக்கும் நட்ட ஈடு வழங்கப்படுவதுடன் அவர்களது வாழ்வா தாரத்திற்கான உத்தரவாதத்தையும் வழங்க வேண்டும்.

தாய் தந்தையரை இழந்த பிள்ளைகள் தமது வயதுக்கேற்ப மனரீதியில் பாதிப்படைந் துள்ளனர். தடுப்பு முகாம்களில் உள்ள தமது கணவரின் வருகையை ஆவலுடன் எதிர் பார்த்து மனைவிகள் நடைப்பிணங்களாகத் திரிகின்றனர்.

மனைவியை இழந்த ஆண்கள் பிள்ளைகளுடன் செய்வதறியாது தவிக்கின்றனர். நிரந்தரமாக கை, கால்களை இழந்தவர்கள் மற்றும் பார்வையிழந்தவர்கள் தமது வாழ்வு வெறுமையடைந்து விட்டதாக உணர்கின்றனர்.

கைபிள்ளைகளுடன் செய்வதறியாது தவிக்கின்றனர். கணவனை இழந்த விதவைகளுக்கு உரிய நட்டஈடு வழங்கப்படு வதுடன் மாதாந்தம் அவர்களுக்குகுடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

தாய், தந்தையரை இழந்த மாணவர்களுக்கு அவர்கள் தங்கள் கல்வி தொடக்கம் தொழில் செய்து சொந்தக்கால்களில் நிற்கும் வரை அரசாங்கம் உதவி செய்யவேண்டும்.

நீங்கள் வெற்றிக்களியாட்டம் நடத்துகின்றீர்கள் எதை வெற்றிகொண்டீர்கள்? யாரை வெற்றி கொண்டீர்கள்? எந்த நாட்டை வெற்றி கொண்டீர்கள்?

இன்னும் யாருடன் யுத்தம் புரிவதற்காக பாதுகாப்புத்துறைக்கு 20 ஆயிரத்து 200 கோடி நிதி ஒதுக்கீடு?

ஓய்வு பெற்ற அங்கவீனமுற்ற படைவீரர்களுக்கான புனர்வாழ்வுக்கான 10 ஆயிரத்து 250 கோடி ரூபாயை செலவிடும் இந்த அரசு யுத்தத்தில் அங்கவீனமானவர்களுக்கும் கண்பார்வை இழந்தவர்களுக்கும் செல்தாக்கியதில் முன்ணாண் பாதிப்புற்று செயற்பாடமையினால் உடல் உறுப்புக்கள் சிறிது சிறி தாக சுருங்கி செயலிழந்து வருகின்ற அனைத்து வயதினருக்கும் உடலில் செல்களின் குண்டுகளின் துண்டுகள் அகற்றப்படாமல், அகற்றினால் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய நிலையில் அச்சத்துடன் உயிர்வாழ்ந்துகொண்டிருக்கும் குழந்தை முதல் முதியோர் வரை உள்ளவர்களுக்கும் இந்த அரசுஎத்தகைய திட்டத்தினை வைத்துள்ளது.

வன்னியில் போர் நடந்த பகுதிகளில் இன்னும் வீதிகள் சரியாக புனரமைக்கப்பட வில்லை. மக்கள் குடியேற்றப்பட்ட கிராமங்களின் உள் வீதிகள் சரியாக சீர்செய்யப்படவில்லை. வன்னிப்பிரதேசத்தின் அனைத்துக் கிராமங் களையும் போக்கு வரத்தின் ஊடாக இணைப்பதற்கு தேவையான பேருந்து சேவைகளை மக்களின் நன்மைகருதி உடனடியாகவும் இடைவிடாதும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதற்குத் தேவையான பேருந்துகளை ஒதுக்க வேண்டும். மீள்குடியேறிய தனது சொந்தக் கிராமத்திலிருந்து அருகில் உள்ள நகரப்பகுதிகளுக்கு செல்வதற்கு அந்த மக்களுக்கு ஒரேஒரு பேருந்து மட்டுமே இயக்கப்படுகின்றது.

இந்தப் பேருந்தில் அவர்கள் காலையில் சென்றால் மாலையில் மட்டுமே வீடுதிரும்ப வேண்டும். இதற்கிடையில் அந்த மக்கள் ஏதேனும் வருத்தம் துன்பம் ஏற்பட்டாலோ அல்லது வேறு எதுவும் அவசிய பணிகள் ஏற் பட்டாலோ அவர்கள் ஏதும் செய்ய முடியாத நிலையிலேயே உள்ளனர்.

மொத்தத்தில் இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டமானது ஒரு கண்ணில் சுண்ணாம் பையும் ஒரு கண்ணில் வெண்ணெயையும் கொண்டதாகவே அமைந்துள்ளது. பாதிக்கப் பட்ட சீரழிந்த தமிழ் மக்களின் கைகளில் திருவோட்டையும் செழிப்புடன் இருக்கும் இந் நாட்டின் உயர்பதவிகளில் இருப்பவர்களின் தொகுதிகளுக்கு மட்டும் அபிவிருத்தியையும் கொடுக்கக் கூடியதாக தயாரிக்கப்பட்டுள்ளது. (ச-5)


**Catholic College of Higher Studies**
**CCHS - (Ahavoli)**
**English course leading to diploma (level III)**

Batch VII is about to commence
6 months course - classes on weekdays from 3.30 -5.30
Apply before 20-07-2010
Only those with a credit in English(O/L) will be considered
For further information contact the Registrar
Ahavoli
St.Patricks road,
Jaffna.
Tel.Ph.No.:021 2222856
(1800)

நீங்கள் 16 வயதுக்கு மேற்பட்டவரா!
உயர் கல்வி? தொழில்? கவலையை விடுங்கள்.
A/L, O/L தேவையில்லை
BIT, CIMA-UK, Engineering-USA
MCS நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் ,
Supported By UNDP/JRRP 324, Palaly Road,Campus Junction,Jaffna.
(C-590)



Digital Printing
டிஜிற்றல் பிறிண்ட்
ஒரு சதுர அடி 30/=
50% விலைக் கழிவுடன்
டிஜிற்றல் பெயர்ப்பலகைகள்
தரமாகவும் விரைவாகவும்
செய்து பெற்றுக்கொள்ளலாம்.



Best Quality
6 COLOURS
கொனிக்கா கலர் லாப்,
இல-14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம். T.P-021 222 3493.
Konica Studio & Colour Lab, Jaffna.
(C-589)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.